Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபால் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ மார்கழி 3 ஆம் நாள் றஜபு 9 (18-12-61) திங்கட்கிழமை இதழ் 263

நாவிற்கு ருசியும்
உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெகலயா.

# ஷோம்பே தப்பியோடினர்?

## கடாங்கா தலைநகர் வீழ்ச்சியடைந்தது!

### திரு. யுதாண்ட் மேலும் 5000 வீரர்களை கோருகிறார்

**எலிஸபெத்வில்லி, டிச. 17**

**கடாங்கா அதிபர் ஷோம்பே தமது அதிகாரிகளுடன் தப்பியோடிவிட்டதாயும் ரொடீஷிய எல்லைப்பகுதியை நோக்கி அவர் சென்றுகொண்டிருப்பதாயும், எலிஸபெத்வில்லி நகரின் பெரும் பகுதியை ஐ. நா. துருப்புகள் வசப்படுத்திக்கொண்டுவிட்டதாயும், இன்னும் சிலமணிநேரத்தில் நகர் முழுதையும் அவைகள் கைப்பற்றிவிடுமெனவும் அறிவிக்கப்பட்டது.**

எலிஸபெத்வில்லியில் ஐ. நா. துருப்புக்களுக்கும் கடாங்கா துருப்புக்களுக்குமிடையே நடைபெற்ற சண்டை அநேகமாக முடிந்துவிட்டதென்றும் கடாங்கா துருப்புக்கள் பின் வாங்கிஓட்டம்பிடித்துக்கொண்டிருப்பதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது. சில சிவிலியன்கள் மட்டும் ஒவ்வொரு இடத்தில் எதிர்ப்புக்காட்டி வருகிறார்கள்.

இதற்கிடையில் கடாங்காவில் சண்டையை நிறுத்துமாறு பிரிட்டன் விடுத்த வேண்டுகோளை ஐ. நா. கடாங்காபற்றிய ஆலோசனைக் கமிட்டி நிராகரித்துவிட்டது. 18 நாடுகளைக் கொண்ட இக்கமிட்டி பெரும்பாலும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளைக் கொண்டதாகும். கடாங்காவில் ஐ. நா. காரியதரிசி திரு. யுதாண்ட் எடுக்கும் நடவடிக்கைக்கு கமிட்டி பலமான ஆதரவளித்தது. பெல்ஜியமும் கிரீஸும் மற்றும் சில நாடுகளும் கூட யுத்த நிறுத்தத்தைக் கோரியதாக திரு. யுதாண்ட் அறிவித்தார். மேலும் 5000 துருப்புக்களைத் தந்துதவும்படி காரியதரிசி ஆசிய, ஆபிரிக்க நாடுகளைக் கேட்டிருக்கிறார். காங்கோவில் ஐ. நா.வுக்கு 20,000 வீரர்களைக் கொண்ட ராணுவம் தேவை என்பது திரு. யுதாண்டின் விருப்பமாகும்.

கடாங்காவில் அமைதியையும், சட்டத்தையும் நிலைநாட்டுவதே தமது வேலை என்றும் அதற்கு முன் பாதிவழியில் சென்று தமது முயற்சியைக் கைவிடப்போவதில்லை என்றும் பிரிட்டனின் கோரிக்கைக்கு திரு. யுதாண்ட் பதிலளித்திருக்கிறார்.

எலிஸபெத்வில்லி ஐ. நா வின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டதென்றும் சில மணிநேரத்தில் முற்றாக அது தம் வசம் வந்து விடுமென்றும் திரு. யுதாண்டின் சிரேஷ்ட ராணுவ ஆலோசகரும், இந்தியாவைச் சேர்ந்தவருமான ரெவில் இந்திரஜித் ரிக்கி அறிவித்தார். நகரில் இரு முக்கிய இலக்குகளை கூர்க்கத் துருப்புக்கள் வலுப்படுத்தியிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

தாம் கடாங்காவுக்கு ராணுவ உதவி புரிவதாய் ஐ. நா. கூறிய குற்றச்சாட்டை வடரொடீஷிய பிரதமர் சர் ராய் வெலன்ஸ்கி மறுத்தார். இக்குற்றச்சாட்டு ஆதாரமற்றதென்றும், இனியும் இவ்விதம் குற்றம் சாட்டாது எனத் தாம் நம்புவதாயும் அவர் மேலும் தெரிவித்தார்.

வானொலி நிலையத்தையும் ஷோம்பேயின் மாளிகையையும் கைப்பற்றிக் கொண்டால் எலிஸபெத்வில்லி நகரம் முழுவதும் ஐ. நா. வசமாகிவிடுமென்று ஒரு அதிகாரி தெரிவித்தார்.

கடாங்காவில் தனது குறிக்கோளை அடையும்வரை ஐ. நா. தனது நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபடும் என்று ஐ. நா. தற்காலிக தலைமைக்காரியதரிசி யுதாண்ட் தெரிவித்தார்.

கடாங்காவில் சண்டை நிறுத்தம் ஏற்படுவதற்கு ஷோம்பே முயற்சி செய்துவருவதாகவும் காங்கோ மத்திய அரசாங்கப் பிரதமர் திரு. அடௌலாவை அவர் எந்த இடத்திலும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடக்த விரும்புவதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

**கடைசிச் செய்தி**

கடாங்கா தலைநகர் எலிஸபெத்வில்லி ஐ. நா. துருப்புக்களிடம் வீழ்ச்சியடைந்துவிட்டதாய் கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறின.

ஷோம்பே மீண்டும் எலிஸபெத்வில்லி திரும்பியிருப்பதாயும் ஊர்ஜிதமற்ற ஒரு செய்தி கூறியது.

---

## பாப்பாண்டவா ஜயந்திக்கு குருஷ்சேவ் வாழ்த்து

வத்திக்கான், டிச. 17

பாப்பரசரின் 80-வது பிறந்த தினத்தைமுன்னிட்டு ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ் அவருக்கு அனுப்பிய வாழ்த்துச்செய்தியில் பாப்பாண்டவரின் சமாதான முயற்சி வெற்றிபெற வேண்டுமென ஆசிகூறியிருக்கிறார்.

## வவனியா பட்டின சபைத் தேர்தல்

வவனியா, ஞாயிறு

வவனியாப் பட்டினசபைத் தேர்தல் இம்மாதம் 23-ந் திகதி நடைபெறவிருக்கின்றது. மொத்தம் 6 வட்டாரங்களில் இரு வட்டாரங்களுக்குப் போட்டியில்லை. இதில் தற்போதைய தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் 1-ம் வட்டாரத்துக்குப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஏனைய 4 வட்டாரங்களிலும் 9 பேர் போட்டியிடுகின்றனர். இவர்களில் 4 பேர் முன்னாள் அங்கத்தவர்கள்.

---

## போலந்து ஸ்தானிகர் யாழ்ப்பாண விஜயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

போலந்து ஸ்தானிகர் நேற்று மாலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து இன்று காலை விமானமார்க்கமாக டில்லிக்குத் திரும்பிச்செல்கிறார்.

போலாந்தில் யுத்தகாலத்தில் ஏற்பட்ட பெரும் சேதங்களை அநேகமாக சீர்செய்துவிட்டதாகவும், மிக பின்தங்கியிருந்த நிலைமையிலிருந்து நாட்டைப் புனருத்தாரணம் செய்ய வேண்டியிருப்பதாயும், அங்கு சிறுபான்மைப் பிரச்னையோ கிடையாதென்றும் தெரிவித்தார்.

## துறைமுக வேலைநிறுத்தத்திற்கு அரசாங்க ஊழியர் ஆதரவு

### நேற்று நடைபெற்ற 5 மணிநேரக் கூட்டம்

கொழும்பு, ஞாயிறு

இன்று 5 மணி நேர ஆலோசனைக்குப்பின் அரசாங்க ஊழியர் சங்க மானேஜ்மெண்ட் கமிட்டி, கீழ்க்கண்ட விஷயங்களைப்பற்றி நடவடிக்கை எடுக்குமுகமாக ஒரு விசேஷ மகாநாட்டைக் கூட்டுவதெனத் தீர்மானித்தது.

1. உணவுப் பொருட்கள், தீப்பெட்டி, மாவு, புகையிலை போன்றவற்றின்மீது விதிக்கப்படும் தீர்வைகளை அகற்றுதல்.
2. 4 சத விகித தேசிய அபிவிருத்தி வரியை வாபஸ்செய்தல்.
3. சம்பளக்கமிஷன் அறுக்கையை உடனடியாக அமுல் நடத்துதல்.
4. வாழ்க்கைச் செலவைக் குறைக்குமுகமாக தொழிச்சங்கங்களுடன் ஒரு திட்டத்தைத் தயாரித்தல்.
5. அவசரகாலச் சட்டத்தை வாபஸ் பெறுதல்.

தற்காலிகத் தலைவர் திரு. ஏ. டி. கவிசேன இதுபற்றிக் குறிப்பிடுகையில், உத்தியோகஸ்தர்களின் இடமாற்றத்தினால் ஏற்படும் கஷ்டங்கள் குறித்தும், மற்றும் பலமுக்கிய விஷயங்களும் இம் மகாநாட்டில் விவாதிக்கப்படும் எனக் கூறினர்.

துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தத்திற்கு கூட்டம் ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்தது.

## துறைமுக வேலைநிறுத்தம் நீடிக்கிறது

### உணவுப் பொருட்கள் விலை அதிகரிக்கும்?

கொழும்பு, ஞாயிறு

தற்போதைய துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் காரணமாக, அத்தியாதசிய உணவுப் பொருட்களின் விலை ஏறுவதுடன் வாழ்க்கைச்செலவும் அதிகரிக்கலாம் என்று தொழில், தேசியமய சேவை மந்திரி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அறிக்கை மேலும் தெரிவிப்பதாவது:-

"துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் காரணமாக ஒன்பது கப்பல்களில் உள்ள 36,000 டன் உணவுப்பொருட்கள் இறக்குமதிசெய்யப் படாமல் இருந்துவருகின்றது. இவ் உணவுப்பொருட்கள், கெட்டுப்போகக்கூடிய நிலைக்கு வருமுன்னர் இறக்குமதி செய்யப்பட்டாகவேண்டும். இதற்கான மாற்று நடவடிக்கையை அரசாங்கம் உடன் மேற்கொள்ளாவிடில், உணவுப்பொருட்களின் விலை ஏறுவதுடன் மட்டுமன்றி வாழ்க்கைச்செலவும் அதிகரிக்கும்".

---

## தந்திச்சேவை அவசியம் தேவை

பளை, ஞாயிறு

இயக்கச்சி உபதபாற் கந்தோரில் தந்திச்சேவை இல்லாதது அப்பகுதி மக்களையும், முக்கியமாக பிரயாணம் செய்பவர்களையும், வாகனம் ஓட்டிகளையும் மிகுந்த கவலைக்குள்ளாக்கி இருக்கின்றது. தாம் ஓட்டி வந்த வாகனம் இயக்கச்சிக்கு அருகாமையில் ஓட்ட முடியாது நின்றுவிட்டால் ஆனையிறவிற்கோ அல்லது பளைக்கோ செல்லவேண்டி நேரிடுகிறதென்றும் இயக்கச்சியில் தந்திச்சேவை இருப்பது தமக்கு மிகவும் உதவியாய் இருக்கும் என்றும் இ. போ. ச. சாரதி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

**ஸ்தலஸ்தாபன கமிஷன்**

## சிப்பந்திகளுக்கு மேலான பாதுகாப்பு அளிக்கிறது

### இடமாற்ற புகார்கள் மிகைப்படுத்தப்படுகின்றன

கொழும்பு, டிச. 16

கொழும்பில் நடைபெற்ற மேயர்கள் மகாநாட்டில் கூறப்பட்ட புகார்களைப்பற்றி 'ஈழநாடு' பிரதிநிதி கேட்டதற்கு ஸ்தலஸ்தாபன சர்விஸ் கமிஷனைச் சேர்ந்த மெம்பரொருவர் கூறியதாவது:-

இடமாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டு பல சிப்பந்திகள், தலைவர்கள், மேயர்கள் இவர்களிடமிருந்து தினசரி ஏராளமான மனுக்கள் கிடைக்கின்றன. ஒவ்வொரு மனுவும் நன்கு பரிசீலனை செய்யப்படுகிறது. காரணம் சரியானதாக இல்லாவிடில் இடமாற்றம் செய்வதில்லை. நேர்மையானதாக இருந்தாலே இடமாற்ற உத்தரவு செய்யப்படும்.

சாதாரணமாக 5 வருடத்துக்குள் ஒருவரை ஓர் இடத்திலிருந்து மாற்றுவதில்லை. ஒருவரை இடமாற்றுவதாயின், அந்த இடத்துக்கு வேறொருவரை மாற்றிக் கொண்டுவர வேண்டியிருக்கும். இப்படி மாற்றப்படுபவர் ஆட்சேபிக்கலாம். அந்த ஆட்சேபத்துக்கு நியாயமான காரணமிருப்பின், அவரை மாற்றுவதில்லை. நியாயமற்றிருப்பின் அவரை மாற்றிவிடுவோம். அதிருப்தியடைந்த அவர், எம். பி. யிடமும் மந்திரியிடமும், பத்திரிகையிலும் முறையிட்டு பிரமாதப்படுத்தக்கூடும். ஸ்தலஸ்தாபன சர்விஸ் கமிஷன் மிக அநியாயம் செய்வதாக மிகைப்படுத்தி பிரசாரம் செய்யப்படலாம்.

கொழும்பு மேயர், கொழும்பு மாநகரசபை நிர்வாகத்தை தனியாகப் பிரித்துவிடவேண்டுமென்று கேட்கின்றார். இப்போதுள்ள முறையில், ஒரு சிப்பந்தியைப் பிடிக்காவிட்டால், வேறோரிடத்துக்கு அவரை மாற்றுவது சாத்தியம். மாநகரசபை தனியாகப் பிரிக்கப்பட்டால், அந்த சிப்பந்தியை வேலை நீக்கம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதாக இருக்கும். சிப்பந்திகளுக்கு ஸ்தலஸ்தாபன சர்விஸ் கமிஷன் பாதுகாப்பு அளிக்கின்றது. அக்கமிஷன் இல்லாதிருப்பின், பல சிப்பந்திகள் அப்பீல் செய்ய முடியாமல், வேலையையும் இழக்க வேண்டி ஏற்படலாம். சிற்சில தவறுகள் ஏற்படக்கூடும். எடுத்துக் குறிப்பிட்டால் தவறுகள் திருத்தப்பட்டுவிடும்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## தேவை

தொழிற்சாலையில், பெக்கிங், வேலை செய்வதற்கு பெண்களும், சைக்கிள் சேல்ஸ்மேனும் உடனே தேவை. சம்பளம் முதல் மூன்று மாதங்களுக்கும் ரூபா 45-00, 60-00 கொமிஷனும் உண்டு. எக்கோணமிக் கார்ப்பரேஷன், இன்டஸ்றீஸ் அன் ஏஜன்ஸிஸ், 230, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாண மாநகரசபை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

### இறைச்சிக்கடைக் குத்தகை – 1962.

யாழ்ப்பாண மாநகர சபையால் கட்டப்பட்டு வாடகைக்கு கொடுக்கப்பட்ட பெரியகடையிலுள்ள 2, 4, 6, 7, 8, 10, 11, 12, 13, 14 ஆகிய இலக்கங் கொண்ட ஆட்டிறைச்சிக் கடைகளும், சின்னக்கடையிலுள்ள 3, 6 ஆகிய இலக்கங்கொண்ட மாட்டிறைச்சிக் கடைகளும் 1-1-62ஆம் திகதி தொடக்கம் 31-12-62ஆம் திகதி வரைக்கும் குத்தகைக்குக் கொடுக்கப்படவிருக்கின்றன.

மேற்படி கடைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் 25-12-61ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். இக்கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப் பத்திரத்தில் தயாரிக்கப்பட்டனவாகவும் அரக்கு முத்திரையிடப்பட்டனவாகவும் இருத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 25-12-61ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி வரை வழங்கப்படும். கேள்விப் பத்திரம் ஒன்றின் விலை ரூபா 2-50. அதற்குரிய பிணைப்பணம் ரூபா 25-00. கொத்தாரிசு உடன்படிக்கைச் செலவு ரூபா 150-00. கேள்விப்பத்திரம் பெறப்படுமன்றே மேற்குறிப்பிடப்பட்டுள்ள மூன்று தொகைகளும் (ரூபா 177-50) செலுத்தப்படவேண்டும்.

1962ஆம் ஆண்டிற்கு மேற்குறித்த கடையின் மாத வாடகை ரூபா 60-00 ஆகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் ஒரு கடைக்கே விண்ணப்பஞ் செய்யலாம். தற்போது இறைச்சிக் கடைகள் வைத்திருப்போருக்கு கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

மாநகரசபைக் கடைகள் அல்லது தகரக் கடைகளை வைத்திருப்போர் மூன்று மாதத்திற்கு மேலதிகமான வாடகை நிலுவைகளைச் செலுத்தாமலிருந்தால் கேள்விப்பத்திரத்திற்கான விண்ணம் செய்வதற்குத் தகுதியற்றவராவர்.

இது சம்பந்தமான இதர விபரங்கள் அறிய விரும்புவோர், கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு எழுத்து மூலமோ அல்லது நேரிலோ விண்ணப்பித்து அறிந்து கொள்ளலாம்.

ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
14-12-61.

## வியாபாரம்பெருக
## விளம்பரம்செய்க

## யாழ்ப்பாண மாநகரசபை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

### இறைச்சிக்கடைக் குத்தகை, பாஷையூர் 1962

பாஷையூர் சந்தையிலிருக்கும் இரு கடைகளை ஆட்டிறைச்சிக் கடைகளாகப் பாவிப்பதற்கு 1-1-62 ஆம் திகதி தொடக்கம் 31-12-62 ஆம் திகதி வரைக்கும் குத்தகைக்குக் கொடுக்கப்படவிருக்கின்றன.

மேற்படி கடைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் 25-12-61ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். இக் கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப் பத்திரத்தில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரையிடப்பட்டனவாகவும் இருத்தல் வேண்டும்

கேள்விப்பத்திரங்கள் 25-12-61ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிவரை வழங்கப்படும். கேள்விப்பத்திரம் ஒன்றின் விலை ரூபா 2-50. அதற்குரிய பிணைப் பணம் ரூபா 25-00. கேள்விப்பத்திரம் பெறப்படு முன்னர் மேற்குறிப்பிட்ட இரு தொகைகளும் (ரூபா 27-50) செலுத்தப்படவேண்டும்.

எவ்வித காரணங்களும் கொடுக்கப்படாமல் கேள்விப்பத்திரங்களை முழுதாகவோ அல்லது தனிப்படவோ நிராகரிக்கும் அல்லது ஏற்றுக் கொள்ளும் உரிமை மாநகரசபையைச் சேர்ந்ததாகும்.

இது சம்பந்தமான இதர விபரங்கள் அறிய விரும்புவோர் இதன் கீழ் கையொப்பமிட்டிருப்பவருக்கு நேரிலோ அல்லது கடித மூலமோ விண்ணப்பித்து அறிந்து கொள்ளலாம்.

ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

மாகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
15-12-61.


டயரும்ஸ்

## மலிவு விற்பனவு

“ஹான்ட்லூம்ஸ்” கேஸ்மென்ற் 20க்கு மேலான கலர்களில் 46” அகலம் விற்பனை விலை 2-60. டயரும்ஸ் யாழ்ப்பாணம்.

“பிறஸ்வியூர்ஸ்” சிறிதுவைத்தை பட்டவை. சாதாரணவிலை 6-25 விற்பனை விலை 3-75- சாதார விலை 4-50 விற்பனை விலை 2-25 சாதாரண விலை 3-50 விற்பனை விலை 1-75.

“ஹான்ட்லூம்ஸ்” பருத்திச் சேலைகள் அருப்புக்கோட்டை கடுமையான கலர்களில் செக் போட்டவைகள். சாதாரண விலை 12-50 விற்பனை விலை 9-50.

“சின்னலம்பட்டி” சேலைகள் “டொம் டொம்” செக்போட்டவை பலரக கலர்களில் உள்ளன. சாதாரண விலை 18-50 விற்பனை விலை 14-50 கொஞ்ச ஸ்டாக்குள் தான் கைவசம் உண்டு.

“ஹான்ட்லூம்ஸ்” “பெதறிற்” சேலைகள் றிபன் போடர்களும் “ரஸில்ஸ்” போட்டவையும் “பேஸ்றல்” கலர்களிலுள்ளன. சாதாரண விலை 24-75 விற்பனை விலை 22-30.

‘சில்க்’ ‘பினிஷ்’ பப்ளின் லைற் நீலக்கலர்களில் மாத்திரமே உள்ளன சாதாரண விலை 4-50, 2-75க்கு விற்று முடிக்கிறோம்.

“பிறின்ரேட்” “கிறேப்” சில்க் 500க்கு மேலான டிசைன்களில் உள்ளன சட்டைகளுக்கு றவுக்கைகளுக்கும் மற்றும் வீட்டுப் பாவனைக்குத் தேவையான எல்லாச் சட்டைகளுக்கும் பாவிக்கக் கூடியது சாதாரண விலை 3-75 தொடக்கம் விற்பனை விலை 2-25 தொடக்கம்.


# ‘தமிழகத்து சிதம்பரனும் வடநாட்டு திலகரும் ஈழநாட்டிலும் தோன்றவேண்டும்’

## வ. உ. சி. நினைவுநாள் விழாவில் பேச்சு

கொழும்பு, ஞாயிறு

இந்திய மக்களின் வாழ்வில் இருள்சூழ்ந்திருந்த நேரத்தில் வடநாட்டில் திலகர் சுதந்திரப் போராட்டத்துக்கு வித்திட்ட சமயத்தில் வ. உ. சிதம்பரனர் தமிழ் நாட்டில் தோன்றினர். மனைவியை மறந்து, படுக்கையிலே கிடந்த மகனை மறந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட வீர புருஷர். அவரது வாழ்வு ஈழத்துவாழ் தமிழ் மக்களுக்கும் ஓர் படிப்பினையாக அமைய வேண்டும். அவருடைய செயல் திறனும், வீரமும் எங்கள் உள்ளங்களிலும் செயல் உருவம் பெறவேண்டும்.”

இவ்வாறு கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற வ. உ. சி. நினைவு நாள் விழாக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். விழாவுக்கு உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமை தாங்கினர்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசியதாவது:-

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நாகரிகத்துடன் வாழ்ந்த தமிழ் மக்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் வாடி வதங்குவதைக்கண்ட வ. உ. சி அவர்கள் சுதேசிக் கப்பல் கொம்பனியைத் தொடங்கி காட்டு மக்களை விழிப்புறச் செய்தார். அதேபோல நாமும்வடக்கிலும் கைத் தொழிலைத் தொடக்கி எமது பொருளாதாரத்தை வளர்க்கவேண்டும்.

திரு. சிவசிதம்பரம் தலைமையுரையில் பாரதக் கடலிலே முதன் முதலில் தமிழ்க்கொடியுடன் கப்பல் ஓட்டியதமிழனின் விழவைக் கொண்டாடுவதில் பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைவதாகக் கூறினர்.

திரு. ஈழவேந்தன் நன்றி கூறினர்’

## சமாசவிழாப் போட்டிகள்

### இம்மாதம் 20-ந் திகதி நடைபெறும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜ விழா பரிசளிப்பு வைபவம் இம்மாதம் 23-ம் திகதி யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இம்மாதம் 20-ம் திகதி காலை சமாசவிழாப் போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறும் இதில் சமாச உபவிழாப் போட்டிகளில் இயல், இசை கலை அரங்கங்களிலுள்ள நிகழ்ச்சிகளில் முதலிடம் பெற்ற நிகழ்ச்சிகளும், வினோதஉடைப் போட்டி, யோகாசனம், தேங்காய் துருவுதல், வெங்காயக் கூடை பின்னுதல் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## வெனிசுலாவில் கென்னடி தம்பதிகள்

நியுயோர்க், டிச. 17

அமெரிக்க ஜனதிபதி கென்னடியும் திருமதி கென்னடியும் இன்று வெனிசுலாநாட்டுக்கு வந்து சேர்ந்தனர். இங்கு நல்லெண்ண விஜயம் செய்துள்ள கென்னடி தம்பதிகள் கொலம்பியாவுக்கும் செல்வர்.




யாழ்.குஞ்சு-உற்பவகம்
இல. 3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

உடன் குஞ்சுகள்
வைற் லெக்கோன், பார்ட் பிலிமத் ரெக் அதிக முட்டை இடும் ஜப்பான் இனங்கள்.

**Jaffna Hatcheries**
No. 3, Stanley Road,
Jaffna.

உத்தரவுபெற்ற விற்பனையாளர்:
ராணி ஸ்ரோஸ்,
கால்நடை கோழி உணவு
& விற்பனையாளர்
சங்கானை.

உரிமையாளர்:
V. S. இராசையா.

இளைஞர்களுக்கு நேரடியாக வரவழைக்கப்பட்ட ‘கிங்கொங்’ “KING KONG” புஸ் சேட் பலவித ரகமான கலர்களிலும் எல்லா சைஸ்களிலும் கிடைக்கும் சாதாரண விலை 12-50 8-80 விற்று முடிக்கிறோம்.

## மலிவு விற்பனை!

### “நைலோன் ஜோர்ஜட்” சேலைகள்

புத்தம் புதிய ஸடாக்குகள்!

50க்கு மேலான கலர்களில் கிடைக்கும்!

சாதாரண விலை 29-50
விற்பனை விலை 27-00

உங்கள் தெரிவுகளை தாமதியாது உடனே தெரிந்தெடுங்கள்.

# டயரும்ஸ்

யாழ்ப்பாணம்.

நத்தார் திருநாளை முன்னிட்டு

# ரொலறம்ஸ்

இலவசம்!
ரூபா 5 பெறுமதியான ஜேர்மன் பவுண்டன் பேனு.



## மலிவு விற்பனை



டிசம்பர் 18-ந் திகதி தொடக்கம்
24-ந் திகதி வரை மாத்திரம்

## ரூபா 50க்கும் அதற்கு மேலும் பிடவைகள் வாங்குபவர்களுக்கு இலவச பரிசளிக்கப்படும்.

எங்களுடைய மலிவு விற்பனையில் பலரகமான பிடவைத் தினுசுகளைப் பார்வையிடலாம்.

# ரொலறம்ஸ்

யாழ்நகரில் பிரபல்யமான பிடவை ஸ்தாபனம்

46, பெரிய தெரு, — யாழ்ப்பாணம்.

# சிறந்த பாட்டாளிகளுக்கு அரசாங்கம் வாழ்வு தரவேண்டும்

## தே. தோ. தொ. சங்கம் கோரிக்கை

கோலாலம்பூர், டிச. 15

வயோதிகப் பாட்டாளிகளை எதிர் நோக்கியுள்ள கடுமையான அவசரப் பிரச்சினைகளைத் தீர்ப்பது முதலாளிகளின் பொறுப்பாகும் என்று தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் கூறியுள்ளது.

இந்தப் பிரச்சினைகளுக்கு முதலாளிகள் கேளாச் செவியினராக இருக்கக்கூடாது என எச்சரித்த சங்கம், வருடக் கணக்காக உழைத்த இவர்களது பிரச்சினைகளை விசேஷ கவனத்துடன் பரிசீலிக்கவேண்டும் என அறைகூவல் விடுத்தது.

வயோதிகப் பாட்டாளிகளின் பிரச்சினைகள் குறித்து தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் 'யூனியன் ஹெரால்டு' என்னும் ஆங்கில மாதப் பத்திரிகை தலையங்கம் தீட்டியுள்ளது.

'ஒரு பாட்டாளி நாள்தோறும் வேலை செய்து தனது மனைவி மக்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் ஆகிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு மட்டுமல்ல பாதுகாப்போடும் மதிப்போடும் ஒரு நாள் வேலையிலிருந்து ஓய்வு பெறுவதற்காகவுமே வேலை செய்கிறார்,' என்று அந்த தலையங்கம் கூறியது.

**பாட்டாளியின் கனவு**

'வயதாகுமுன்பே பதவி ஓய்வு' என்னும் அந்த தலையங்கம் மேலும் கூறுவதாவது:-

'ஒரு தொழிலாளி தனது வாழ்வின் பெரும் பகுதியை தனது முதலாளிக்காகச் செலவிடுகிறார்.

'அதே சமயத்தில், தமது முதலாளிக்கு தாம் செலுத்திய பூரண விசுவாசத்திற்காக வயதான காலத்தில் வேலையிலிருந்து ஓய்வு பெற்று நீங்கும்போது தமக்கு வெகுமதி அளிக்கப்படும் என்றும் எஞ்சிய காலத்தை நிம்மதியுடன் கழிக்க முடியும் என்றும் அவர் கனவு காண்கிறார்.

"அந்த தொழிலாளி தனது மேலதிகாரியிடமிருந்து வரும் ஒரு கடிதத்தால் கனவிலிருந்து விழித்துக் கொள்கிறார்.

"அந்தக் கடிதம் தமது சேவை தேவையில்லை என்றும் ஒரு மாதத்தில் வேலையிலிருந்து தம்மை நீக்கப்படும் என்றும் கூறுவதைக் கண்ட அவர் மனம் உடைந்து போகிறார். ஏமாற்றம் மேலிடுகிறது.

**'இலாபம் அதிகரிக்கிறது'**

மக்கள் தொகை பெருக்கத்தாலும் ஸ்திரமான சாக்கார் இருப்பதாலும் வர்த்தகம் பெருகிக் கொண்டே இருக்கிறது என்றும் அதனால் இலாபமும் பெருகிக் கொண்டிருக்கிறது என்றும் தலையங்கம் கூறுகிறது.

'கம்பெனிக்கு கிடைத்த அதிகமான இலாபத் தொகை ஏழை வயோதிகப்பாட்டாளிக்குப் போதிய கிராஜுட்டியும் பென்ஷனும் அளிக்கச் செலவிடப்பட்டிருக்கவேண்டும்.

"அதற்குப் பதில், வருமான வரி இலாகாவிற்கே அதிகப் பணம் செலுத்த கம்பெனிகள் முன்வருகின்றன என்று அந்த பத்திரிகை கூறியது.

ஓய்வு பெறும் வயது வரும் முன்பே வேலையிலிருந்து ஓய்வு பெற்று நீங்கவிருக்கும் தொழிலாளர்கள் விஷயத்தில் முதலாளிகள் தங்கள் போக்கை புனராலோசனை செய்யுமாறு அது வேண்டுகோள் விடுத்தது.

ஒவ்வொரு தொழிலாளியின் நலன்களைப் பாதுகாப்பதும் வயோதிக தொழிலாளர்களுக்குப் போதிய பென்ஷனும் வெகுமதியும் அளிப்பதும் எல்லா நிர்வாகத்தினரின் கடமையாகும் என அது சுட்டிக் காட்டியது.

## அரசியல் பயிற்சி நிலையம்

சிங்கப்பூர், டிச. 15

மக்கள் செயல் கட்சி அதனுடைய அரசியல் வேலைகளுக்காக அரசியல் பயிற்சி நிலையத்தைப் பயன்படுத்துவதாக சிங்கப்பூர் கலாசார அமைச்சர் திரு. எஸ். ராஜரத்தினம் இன்று ராஜ்ய சட்டசபையில் கூறினார்.

சிங்கப்பூரின் பொது உறவு அதிகாரியாக 1955 முதல் 1959 வரை பணியாற்றியுள்ள திரு. ஜி. ஜி. தாம்சன் இம் மாதக் கடைசியில் தனது சேவையிலிருந்து விலகவிருப்பதையும் திரு. ராஜரத்தினம் அறிவித்தார்.

தொடர்ந்து நடைபெற்ற ஒரு விவாதத்தில், கடந்த ஈராண்டுகளாக திரு. தாம்சன் தொடர்ந்து சேவையாற்றி வந்துள்ளதைத் தாக்கிப் பேசினார். பாரிசான் சோஷியலிஸ் அங்கத்தினர் திரு. எஸ். பி. பாணி.

## நல்ல காலம் வருமா? வெளிமடை இ. தொ. கா. கூட்டம்

பதுளை, ஞாயிறு

"நாடு போய்க்கொண்டுருக்கும் நிலையைப் பார்த்தால் நமக்கு நல்லதோர் காலம் வருமா என்றே கவலைப்பட வேண்டியுள்ளது." என்று வெளிமடை அம்புகஸ்தோவை இ. தொ. கா. கூட்டத்தில் பேசும்போது பதுளை மாவட்ட பொதுச் செயலாளர் திரு. வீர. தங்கவேல் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:—

நாடு சுபிட்சமடையவேண்டுமானால் தொழிலாளர்களாகிய எங்கள் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். எம்மிடம் இருந்து பறித்த உரிமைகளை மீண்டும் கொடுத்தால் நாம் நமது ஒத்துழைப்பைக் கொடுப்போம்.

# சமசமாஜ கட்சியினுல் தான் இந்தியர் பிரச்சினை தீரும்!

## அட்டன் மகாநாட்டில் விவியன் குணவர்த்தனு

அட்டன், ஞாயிறு

"இலங்கை-இந்தியர் பிரச்சினையை லங்காசமசமாஜக் கட்சியினுல் மட்டும்தான் தீர்க்க முடியும்" என்று சமசமாஜக் கட்சிப் பிரமுகர் திருமதி விவியன் குணவர்த்தனு லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் மகாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சியில் தொண்டர்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அட்டன் நகரசபைத் தலைவர் திரு. பி ஜி. ஆரியத்திலகா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திருமதி விவியன் குணவர்த்தனு மேலும் கூறியதாவது:

தோட்டத் தொழிலாளர்கள் தோட்டத் தொழிலையே நம்பியிருக்காமல் இதர கைத்தொழில்களிலும் ஈடுபடவேண்டும். இந்த நாட்டின் பொருளாதாரம் உங்கள் கையில்தானுள்ளது. இது உங்கள் நாடு என்று நீங்கள் நினைத்து இந்த நாட்டில் தொழிலாளர் விவசாய அரசாங்கத்தை அமைக்க எங்களுடன்ஒத்துழைக்கவேண்டும்.

ஆஸ்பத்திரிகளும் பாடசாலைகளும் உங்களுடைய உழைப்பினுல் கிடைக்கும் வருமானத்தில்தான் அமைக்கப்படுகின்றன. ஆனுல் உங்கள் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. ஒரு கோஷ்டி இந்நாட்டில் வகுப்புவாதத்தைக் கிளப்பிவிட முயற்சி செய்கின்றது. இந்த பிரசாரத்திற்கு நீங்கள் செவி சாய்க்கக் கூடாது.

நூற்றுண்டு காலமாகநீங்கள் சகோதரகளாக வாழ முடியுமானுல் ஏன் அப்படியே தொடர்ந்து வாழ முடியாது. தொழிலாளர் எல்லோருக்கும் பிரஜாவுரிமை வழங்கப் போவதாக எங்கள்மீது குற்றம்சாட்டுகிறுர்கள்.

ஐக்கிய தேசிய கட்சியும் சுதந்திரக் கட்சியும் இந்தியர் பிரச்சினையைத் தீர்க்கவில்லை எல்லோரையும் ஐக்கிபப்படுத்தும் சக்தி வாய்ந்த சமசமாஜக் கட்சியினுல் மட்டும்தான் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும். இப்பிரச்சினை இங்கேயே தீர்க்கப்படவேண்டும். 'நேருவுக்கு ஜே' என்று சத்தமிடுவதில் அர்த்தமில்லை.

செனட்டர் டொரிக் டி' சூசரு பேசுகையில் சென்ற 20 வதிடங்களாக பிற்போக்குவாதகளின் தலைமையில் இருந்தால்தான் தொழிலாளர்கற தங்கள் உரிமைகளைப் பெற முடியாது போய்விட்டதெனுர்.

"எங்களுடைய உரிமைகளை நாங்கள் விரைவில் பெற்றுக் கொள்வோமென்று நம்புகிறேன்" என்று செனட்டர் டி' சூசா கூறினுர்.

அட்டன் மகாநாடு

# தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகள் தீராவிடில்.!

## அரசாங்கத்துக்கு டாக்டர் பெரேரா எச்சரிக்கை

அட்டன், சனி

"தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை அரசாங்கம் தீர்க்காவிட்டால், தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காக தோட்டத் தொழிலாளர்களும், பஸ், துறைமுகத் தொழிலாளர்களைப்போல் கிளர்ந்தெழுவார்கள் என்று அரசாங்கத்துக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்."

இவ்வாறு டாக்டர் என். எம். பெரேரா லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனின் 17-வது மகாநாட்டில், பிரதிநிகள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

லங்கா தோட்டத் தொழிலாள யூனியனின் 17-வது மகாநாடு இன்று சனிக்கிழமை இங்கு ஆரம்பமானது. வீதிகளில் சிவப்புக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகள் பல இடங்களிலும் காட்யளித்துக் கொண்டிருந்தன. நகர் முழுவதும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. செஞ்சட்டை அணிந்திருந்த சுமார் ஆயிரம் தொண்டர்களின் அணிவகுப்பும் ஊர்வலமும் நடைபெற்றது.

ஹைலன்ட்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற யூனியன் பிரதிநிகளின் கூட்டத்திற்குத் தலைமை வகித்து டாக்டர் என். எம். பெரேரா பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுமார் 500 பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த மகாநாட்டில் டாக்டர் பெரேரா மேலும் கூறியதாவது:-

தோட்ட முதலாளிமார்களின் உதவியுடன் பொலிஸ் படை தொழிலாளர்களுக்குத் தொந்தரவு செய்கிறது. கணக்கப்பிள்ளைகளும் கண்டக்டர்களும் கூட தொழிலாளர்களைத் தொந்தரவு செய்கின்றனர். இதற்கு அரசாங்கம் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

**பாடசாலைகள் நிலைமை**

தோட்டப் பாடசாலைகளின் நிலைமை மாட்டுக் கொட்டில்களைவிட மோசம். கல்வி அமைச்சருக்குச் சில கோரிக்கைகளைச் சமர்ப்பித்தோம். இப்பிரச்சினைகளை அரசாங்கம் விரைவில் தீர்க்குமெனவும் நம்புகிறோம். துறைமுக, பஸ் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் சேவைக்கால உபகாரப்பணம் கொடுக்க முடியுமானுல் தோட்டத் தொழிலாளர்களுக்கும் சேவைக்கால உபகாரபப்ணம் வழங்குவதற்கு சட்டம் ஏன் கொண்டுவர முடியாது? 1954-ம் ஆண்டிற்குப் பிறகு எல்லாத் தொழிலாளருக்கும் சம்பள உயர்வு கிடைத்தது. ஆனுல் தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு கிடைக்கவில்லை. சம்பளத்தை உயர்த்தாமல் வேலை நாட்களையும் குறைக்கின்றனர். இந்த அநியாயத்தை தோட்டத் தொழிலாளர் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள்.

**தேசியமயமாக்கச் சொல்கிறோம்**

தேயிலை விலை வீழ்ச்சியடைந்துவிட்டது என்று அரசாங்கம் கூறக்கூடும். இதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. தேயிலை ரப்பர் தோட்டங்களைத் தேசியமயமாக்கும்படி நாங்கள் கூறுகிறோம்.

**இந்தியர் பிரச்சினை**

இலங்கை இந்தியர் பிரச்சினையை அரசாங்கம் தீர்க்குமென எதிர்பார்த்தோம். ஆனுல் அரசாங்கம் எதையும் செய்யவில்லை. இப்பிரச்சினையை இந்திய அரசாங்கத்துடன் அணுகி மனிதாபிமான முறையில் தீர்க்க வேண்டும்.

முள்ளியவளை, ஞாயிறு

வவனிக்குள குடியேற்றத் திட்டத்தையடுத்த ஒட்டறுத்த குளத்தில், பயிர்களை அழித்துச் சேதப்படுத்தியும், விவசாயிகளுக்குத் திகிலூட்டியும் வந்த கிளட்டு யானை ஒன்று, விவசாயி ஒருவரால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

## மோட்டார்வான் விபத்து

### ஒருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்றுக் காலை புங்குடுதீவில் நடைபெற்ற ஓர் மோட்டார் வான் விபத்தின் காரணமாக ஐம்பது வயதுடைய கணேசு என்பவர் காயங்களுடனும், காலில் முறிவுடனும் யாழ்ப்பாணம் பெரியஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வெளிநாடுகளுக்கு மாணவர்கள் பயணம்

கோலாலம்பூர், டிச. 15

மொத்தம் 800க்கு அதிகமான மலாயா மாணவர்கள் இம்மாதம் மலாயாவுக்கும் பிரிட்டனுக்குமிடையேவிமானத்தில் பறப்பார்கள்.

இதில் பாதிப் பேர்கள் பிரிட்டனிலுள்ள கிர்க்பி, பிரின்ஸ் [illegible] ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் சேர இங்கிருந்து பிரிட்டனுக்கு விமானத்தில் செல்வார்கள்.

மறு பாதிப் பேர் பிரிட்டனில் பயிற்சி முடிந்து மலாயா திரும்பி வருவார்கள்.

## அல்ஜீரிய பேச்சுவார்த்தை

நியுயோர்க், டிச. 17

அல்ஜீரியாவுக்கு சுதந்திரமும் சுயநிர்ணய உரிமையும் வழங்குவதுபற்றி அல்ஜீரிய தேசியவாதிகளுடன் பிரான்ஸ் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றை ஆசிய ஆபிரிக்க குழுவைச் சேர்ந்த 31 நாடுகள் ஐ. நா. அரசியல் கமிட்டியில் சமர்ப்பித்துள்ளன.

திருமலை, ஞாயிறு

மூதூர் அரசினர் மகாவித்தியாலயத்தில் மரம் நாட்டு விழாவை மூதூர்ப் பகுதிக் காரியாதிகாரி திரு. கே. செல்வரத்தினம் ஆரம்பித்துவைத்தார். இவ்விழாவில் விவசாயப் போதனசிரியர் திரு. அ. சுப்பையா, கிராம நீதவான் ஜனப் ஏ. எம். ஏ அலாவுதீன் ஆகியோர் பங்குபற்றினர்.


உங்கள் கடைசி சந்தர்ப்பம்!

வெளிநாட்டு சப்பாத்து வகைகள் இனிமேலும் நீங்கள் வாங்கிக்கொள்ள முடியாது!

ஆகவே

டயரும்ஸ் யாழ்ப்பாணம்

மலிவு விற்பனையில் தெரிவுசெய்யுங்கள்.

கால்வாசி விலையிலேயே விற்பனையாகிறது என்பதை மறவாதீர்கள்!

12

### மணி வாக்கு:

இதயத்திலிருந்து பகைமை எண்ணம் அனைத்தையும் நீக்கி விட்டு அறச் செயல்களைச் செய்வதன் மூலம் என்னை வழி படுவாய்.

—பகவத்கீதை


# ஈழநாடு

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மார்கழி மீ 3 உ (18-12-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## மேயர்கள் புகார்

சென்ற சனிக்கிழமையன்று கொழும்பில் மகாநாடு கூடிய மேயர்களும் உதவி மேயர்களும், பொதுவாக ஒரு புகார் தெரிவித்தனர். நகரசபையிலுள்ள சிப்பந்திகளை, அரசியல் கட்சிக் காரணங்களுக்காக, ஸ்தல ஸ்தாபன சர்வீஸ் கமிஷன் தன் இஷ்டப்படி இடத்துக்கு இடம் மாற்றுவதாகக் குற்றம் சுமத்தினர். அதிகாரிகள் இடமாற்றுவிஷயமாக சமீபத்தில் பல சிக்கல்கள் கிழம்பி ஊர் சிரிக்கும் நிலைமையும் ஏற்பட்டதையும் பார்த்தோம். ஸ்தல ஸ்தாபன ஆட்சியின் மேலான நன்மையைக் கருதி இந்த நிலைமை சீர்செய்யப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

இதேசமயம் சில சிப்பந்திகளும் முக்கியமான புகார் கூறுகிருர்கள். சொந்த அல்லது கட்சிக் காரணங்களால், தங்களை வேலையிலிருந்து நிறுத்திவைத்து இடமாற்றம் செய்யும்படியும், வேலைநீக்கம் செய்யும்படியும் சர்வீஸ் கமிஷனுக்கு அதிபர்கள் எழுதுவதாயும், சர்வீஸ் கமிஷன்தான் தங்களுக்கு இருக்கும் ஒரே பாதுகாப்பென்றும் தெரிவிக்கின்றனர். சிப்பந்திகளுக்குத் தேவையான பாதுகாப்பு அளிக்கவே ஸ்தல ஸ்தாபன சர்வீஸ் கமிஷன் நியமிக்கப்பட்டது. சீரான சம்பளத் திட்டம், வேலைபாதுகாப்பு முதலிய வசதிகள் இச் சிப்பந்திகளுக்கு இதனுல் கிடைக்க முடிந்தன.

ஆனுல், அக் கமிஷனிலும் அரசியல் கட்சிச் சார்புள்ளவர்கள் நியமிக்கப்படுவதாயும், இதனுல், கமிஷனின் சில தீர்ப்புகள் பாரபட்சமாக இருந்து ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தையே சீர்குலைப்பதாக இருப்பதாயும் சொல்லப்படுகிறது. இப்போதுள்ள கமிஷனில் ஸ்தல ஸ்தாபனங்களின் சார்பாகவும் சில பிரதிநிதிகள் இருந்துவருகிருர்கள். ஆனுல், புதிதாகத் தயாரிக்கப்படும் திருத்த மசோதாவின்படி இக்கமிஷனில் ஸ்தல ஸ்தாபன பிரதிநிதிகள் யாருமே இருக்கமாட்டார்களென்றும், எல்லாரையும் மந்திரியே நியமிப்பாரென்றும் அதிகாரிகளை ஓரிடத்திலிருந்து மற்ருேர் இடத்துக்கு மாற்றும் அதிகாரமும் இனி மந்திரிக்கே இருக்குமென்றும் தெரிகிறது. அப்படி ஏற்பட்டால், ஸ்தல ஸ்தாபனங்களின் நிலைமை இப்போதுள்ளதைவிட அதிக மோசமாகிவிடக்கூடும்.

ஸ்தலஸ்தாபனங்கள் என்பன ஸ்தல சுயாட்சிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். அதாவது ஒரு நகரிலோ, கிராமத்திலோவுள்ள மக்கள், தங்கள் ஊர் நிர்வாகத்தை வெளியார் தலையீடின்றி தாங்களே நிர்வகித்துக்கொள்ள வேண்டும். பாரத நாட்டிலே கிராமப்பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்படுத்தப்படுவதும் இதே கொள்கையின் மீது தான். மத்திய அரசாங்கம் ஸ்தல ஸ்தாபனங்களின் அன்ருட விஷயங்களிலே நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவே தலையிடுவது ஸ்தல சுயாட்சி வளர்வதற்குத் தடையாகும். கூடுமானவரை தலைமை அரசாங்கத் தலையீடு இல்லாமவிருப்பதுதான் விரும்பத்தக்கது. இவ்விஷயங்களை யெல்லாம் அரசியல் சீர்திருத்த கூட்டுக் கமிட்டி ஆராய்ந்து, ஸ்தல சுயாட்சி மேலோங்கும் முறையில் தக்க திருத்தங்களைச் செய்யவேண்டும்.

இதற்கிடையே, சிப்பந்திகளும், கட்சி அரசியலில் சிக்காமல் எவ்வளவுதாரம் ஒதுங்கி தங்கள் கடமைகளைச் செய்கிருர்களோ, அவ்வளவும் அவர்களுக்கும் நிர்வாகத்துக்கும் நல்லதாகும். குறுகிய கட்சி அரசியலும் பதவி வேட்டைகளும் தான் தலைமையிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும் ஏற்படும் சிக்கல்களுக்கும் நிர்வாகஊழல்களுக்கும் பெரிதும் காரணமென்பது பகிரங்க இரகசியம். இதை உடனடியாக நீக்குவதென்பது முடியாது. என்ருலும் இச் சேற்றில் சிக்காமல், பொது நன்மையையே முக்கியமாகக் கருதி தொண்டாற்றுபவர்கள் பொதுமக்களின் மேலான நன்மைக்குப் பாத்திரமாவார்கள்.

# உலக மேடை

## கோவா மீது படையெடுப்பு ★ நேட்டோ உதவுமா? ★ ராஜீயவிளைவுகள் மோசமாகும்

-- டி. எம். எம். —

“கோவாமீது இந்தியா படையெடுக்குமா இல்லையா?” இந்தக் கேள்வி இந்தியாவிலும் லிஸ்பனிலும மட்டுமின்றி வாஷிங்டனிலும், லண்டனிலும், இதர “நேட்டோ” தலைநகரங்களிலும் கேட்கப்படுகிறது. சம்பவங்களின் போக்கைப் பார்த்தால் கட்டாயம் படையெடுப்பு, நடந்தே தீரும் என ஊகிக்க இடமிருக்கிறது. “எப்போது படையெடுக்கும்” என்ற கேள்வி அதைத்தொடர்ந்து எழுகிறது.

இது இந்தியாவின் கையிலில்லை என்றும், போர்த்துக்கலின் நடவடிக்கையே இதைத் தீர்மானிக்கும் என்றும் புதுடில்லி வெளியிட்ட கருத்தை நாமும் அப்படியே ஏற்றுக்கொள்வதில் பிசகில்லை.

படையெடுப்பு பல உருவங்களில் ஏற்படலாம். “பொலிஸ் நடவடிக்கை” என்ற பெயராலோ, அல்லது “ராணுவ நடவடிக்கை” என்ற பெயராலோ, “விடுதலைப் போர்” என்ற பெயராலோ அது நடைபெறக்கூடும்.

### துருப்புக்கள் நடமாட்டம்

இந்தியாவின் வடக்கு' தெற்கு, மேற்குப் பகுதிகளுக்கிடையே சென்ற வாரம் நூறு ரயில் போக்குவரத்துக்கள் திடீரென நிறுத்தப்பட்டன. ரயில் நிலையங்களுக்குச் சென்ற பிரயாணிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்ப நேரிட்டது காரணம் அறிவிக்கப்படவில்லையாயினும் பின்னுல் வந்த செய்திகள் நிலைமையைத் தெளிவாக்கின. பெருமளவில் துருப்பு நடமாட்டம் அங்கு இருந்திருக்கிறது. டாங்கிகளுடனும், பீரங்கிகளுடனும் இந்திய சீக்கியத் துருப்புக்கள் கோவாவுடனுள்ள 180 மைல் நீளப் பிரதேசத்தில் நிலைகொண்டுவிட்டார்கள். சில நிமிஷ நேரத்தில் கோவாவுக்குள் சரேலெனப் பாயக்கூடிய தூரத்தில் அவர்கள் இருக்கின்றனர். இந்திய ஆகாயப் படையும் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மக்களின் பயத்தை நீக்கும் பொருட்டு இந்திய குருஸ்ஸர்களும், நாசகாரிகளும் கடற்பகுதிகளில் நடமாடிவருகின்றன. இதேபோல் போர்த்துகலும் கோவாவை ஒரு போர்க்களமாக்கிவிட்டது. அங்கு ஏற்கனவே 30 பேருக்கு ஒரு சிப்பாய் வீதம் இருப்பதாயும் புதிய வீரர்கள் வந்துகொண்டிருப்பதாயும் தகவல்கள் கிடைத்துவருகின்றன. கோவாவில் 12 ஆயிரம் சிப்பாய்கள் இருப்பதாயும், போர் விமானங்களும், புதிய விமானத் தளங்களும் பெருகி வருவதாயும், எல்லையிலும், கடலிலும் கண்ணிகளை அவர்கள் விதைத்திருப்பதாயும் கூறப்படுகிறது.

### “நேட்டோ உதவியும் ராஜீய விளைவுகளும்”

ராணுவரீதியில் இந்தியா கோவாவை வெற்றிகொள்வதில் சந்தேகமில்லையாயினும் அதைத் தொடர்ந்து ஏற்படும் ராஜீய விளைவுகளைப்பற்றியும் யோசிக்க வேண்டியிருக்கிறது. ராணுவ ரீதியிலும்கூட பல்வேறு விஷயங்களை ஆராய வேண்டியிருக்கிறது. போர்த்துக்கல் “நேட்டோ”வில் ஒரு அங்கத்துவ நாடு. தன் அங்கத்தினர் தாக்கப்படுவதை “நேட்டோ” நாடுகள் விரும்பாதுஎன்பது தெளிவு. எனவே நேட்டோவின் ராணுவ உதவி போர்த்துக்கலுக்குக் கிடைக்குமா என்பதும் இங்கு ஆராய வேண்டிய விஷயம். மேலும் அமெரிக்காவும் பிரிட்டனும், பிரான்சும் இந்தியா ராணுவ நடவடிக்கை எடுப்பதை விரும்பவில்லை என்பதைத் தெளிவாக்கியிருக்கின்றன. சமாதான முறையில் தீர்வுகாணுமாறு அவை கூறுகின்றன. (கடாங்காவில் ராணுவ நடவடிக்கையை அமெரிக்கா ஆதரிக்கிறது. ஐக்கியகாங்கோவுக்கெதிராக ஷோம்பே நடத்தும் பலாத்கார வெறியாட்டத்துக்கு பிரிட்டனும், பிரான்சும் ஆதரவளிக்கின்றன.) இந்த நிலையில் கோவாவில் இந்திய ராணுவ நடவடிக்கையை மேற்கு நாடுகள் ஆதரிக்காதது விந்தையே! இந்தியா ராணுவ நடவடிக்கை எடுத்தால் அது பிரிட்டனுக்குக் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் என்றும் அதனுல் பெரிய விளைவுகள் ஏற்படும் என்றும் பிரிட்டிஷ் காமன்வெல்த் விவகார மந்திரி கூறியிருக்கிருர். அவர் எதை மனதில் கொண்டு இப்படிக் கூறினுரோ தெரியவில்லை. ஒருவேளை, “நேட்டோ”வை மனதில் கொண்டிருக்கலாம். ஆயினும் “நேட்டோ” நாடுகள் ஆசியாவிலுள்ள முக்கிய ஜனநாயக சமாதான நாடான இந்தியாவைப் பகைத்துக்கொள்வது பைத்தியகாரத்தனம் என்பதை அறியும். அங்கோலாவிலும், மொஸாம்பிக்கிலும், கோவாவிலும் மற்றும் பலவிடங்களிலும் போர்த்துக்கல் செய்துவரும் கொடுமைகள் எத்தகையது என்பதை உலகம் முழுதும் அறியும். இந்த நிலையில் இந்தியாவின் நியாயமான நடவடிக்கைக்கெதிராக நேட்டோவின் ராணுவ உதவி பாவிக்கப்படுமானுல் அதனுல் இந்தியாவில் ஏற்படும் உணர்ச்சிகளை ரஷ்யா போன்ற நாடுகள் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக்கொள்ளத் தவருது எனலாம். எனவே, காங்கோவில் நடப்பதுபோல் மறைமுகமாக வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் போர்த்துக்கலுக்கும் உதவக்கூடும்.

### டல்லஸ் கொள்கை

சில வருடங்களுக்கு முன் காலஞ்சென்ற அமெரிக்கவெளிநாட்டு மந்திரி டல்லஸ், கோவா போர்த்துக்கலின் ஒரு பகுதி எனப் பொருள்படும்படி கூறியதும், இதனுல் இந்திய அமெரிக்க உறவில் ஏற்பட்ட நெருக்கடிகளும் இங்கு நினைவுக்குக் கொண்டு வரத்தக்கதாகும். கென்னடி நிர்வாகம் இவ்விஷயமாகக் கொண்டுள்ள கொள்கை டல்லஸின் கொள்கைக்கு மாறுபட்டதாயிருந்தாலும் இல்லாவிட்டாலும், ராணுவ நடவடிக்கையை அது ஆதரிக்கவில்லை என்பது தெளிவு. போர்த்துக்கலுக்கு உருப்படியாக உதவிசெய்ய வேண்டுமானுல் ஒப்பந்தப்படி அது நேட்டோவினுல்தான் முடியும். ஆனுல் இப்படி உதவிசெய்யுமானுல் அதன் ராஜீய விளைவுகள் மேற்கு நாடுகளுக்குப் பாதகமாய்த்தான் இருக்கும். காமன்வெல்த் பலவீனப்படும். இந்தியாவை விரோதித்துக்கொள்வதினுல் பிரிட்டனுக்குப் பல ராஜீயக் கஷ்டங்கள் ஏற்படும். ஆசியாவில் இடதுசாரிக் கொள்கைக்கு செல்வாக்கு அதிகரிக்கவும் சாத்தியம் ஏற்படும்.

### பின்லாந்து உதாரணம்

இப்போது கோவாவிலுள்ள ராணுவமும்கூட சக்தி குறைந்ததெனச் சொல்லமுடியாது. இந்திய ராணுவ யந்திரத்துடன் ஒப்பிடும்போது அதை பொம்மைத் துப்பாக்கி எனலாம். ஆயினும் 20 வருடங்களுக்குமுன் 1939 அல்லது 40ம் ஆண்டு பெரிய நாடான ரஷ்யா, சின்னஞ்சிறு நாடான பின்லாந்தை சரணடையச் செய்வதில் எவ்வளவோ கஷ்டப்பட்டதென்பதை உணரும்போது கோவா சண்டை எதிர்பார்த்ததுபோல் ஒன்றிரண்டு நாட்களில் முடியாமல் ஒருமாதம் நீடிக்கலாம் என்பதிலும் ஆச்சரியமில்லை.

### சமாதான தொண்டர்கள்

இந்தியா துரிதமாக ராணுவ நடவடிக்கையில் இறங்காவிட்டால் 5000 சமாதானத் தொண்டர்கள் அங்கு பிரவேசிக்கப்போவதாய் பம்பாயிலுள்ள கோவா விடுதலை இயக்கத்தினர் அறிவித்துள்ளனர். சிலவருடங்களுக்கு முன்பு ஒரு தடவை இப்படித்தான் கோவாவிற்குள் சமாதானத் தொண்டர்கள் பிரவேசித்தனர். ஆனுல் சர்வதேசச் சட்டத்தின்படி அவர்கள் கைது செய்யப்படாமல் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பது நினைவிருக்கலாம். அதேபோல் போர்த்துக்கல் இந்தத்தடவையும் செய்யாதென்பதற்கு எவ்வித அறிகுறியும் இல்லை.

இந்த தொண்டர்கள் மீது போத்துக்கேயர் விடுக்கும் முதல் சூடு, எல்லையிலுள்ள இந்தியத் துருப்புக்களை நிமிஷவேகத்தில் உள்ளே அழைக்கும்படி செய்துவிடலாம்.

### ஹைதராபாத்தில்

இந்தியா கோவாமீது படையெடுத்தால் போர்த்துக்கல் இந்திய நகரங்கள்மீது குண்டுமாரி பொழியும் என லிஸ்பன் கூறுகிறது. இதைக்கேட்டு ஹைதராபாத்தில் நடைபெற்ற சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன.

சர்தார் வல்லபாய்படேல் அப்போது இந்தியாவின் உள்நாட்டு மந்திரியாக இருந்தார். அச்சமயம் ரஸாக்கர்கள் தலைவராய் இருந்த காஸிம்ரஸ்வி, ஹைதராபாத்தில் ஒரு இந்திய வீரன் நுழைந்தால் புதுடில்லிவரை 5 லட்சம் ரஸாக்கர்கள் ஊடுருவிச்செல்வர் என சவால் விடுத்தார். ஆனுல் மூன்றரை நாட்களில் விமானப்படையின் ஒத்துழைப்புடன் இந்திய ராணுவம் ஹைதரபாத்தைத் தோற்கடித்து ரஸ்வியைக் கைதுசெய்தது. இதே நிலை கோவாவுக்கும் பொருந்தும் என்பதில் சந்தேகமில்லை.

ஏற்கனவே இந்திய வேவு விமானங்களும், தளபதிகளும் எல்லைப்புறம் சென்று “நோட்டம்” பார்த்துவருவதிலிருந்து தாக்குதல் நிச்சயம் என்பது ஊர்ஜிதமாகிவருகிறது.

### தேர்தல் காரணம்

இந்தியா தாக்கும் என்பதற்கு மற்ருேர்காரணத்தையும் இங்கு குறிப்பிடலாம். அடுத்த பிப்ரவரி மாதம் பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கிறது. இதற்கிடையில் கோவாவை விடுவித்து அரசாங்கத்தின் செல்வாக்கைப் பெருக்கிக்கொள்வதின்மூலம் காங்கிரஸ் கட்சியை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டுவருவதே அது. நேருஜி போன்றவர்கள் தேசியப் பிரச்சினையாக கோவா விஷயத்தைக் கருதினுலும், கடைசியில் இதர செல்வாக்குசக்தி

(5 ம் பக்கம் பார்க்க)

## ஜயாறன் எழுதுவது

காய்கறிமுதலிய பலசாமான்களின் விலைவாசிகள் மீண்டும் இங்கு ஏறிவிட்டதாக ஓர் அன்பர் தெரிவிக்கிருர். காரணம் கொழும்புத் துறைமுக வேலைநிறுத்தம்தான்.

இந்த வேலை நிறுத்தம் எப்போது முடியும்? தினசரிச் சம்பளம்பெறும் துறைமுகத் தொழிலாளர் மாதச் சம்பளம் வேண்டுமென்று இந்தத் திடீர் வேலைநிறுத்தம்செய்திருக்கிருர்களாம். மாதச்சம்பளம் கொடுப்பதாயின் அதற்கு எவ்வளவு அதிகப் பணம் வேண்டியிருக்குமோ!

ஏற்கெனவே அரசாங்கத்திடம் அன்ருடச் செலவுக்கும் பணமில்லை. அதனுல் 25 கோடி ருபாய் அவசர கடன் வாங்க முன்வந்தனர். இந்நிலையில், என்ன செய்யப் போகின்றனர்?

சில உணவுக்கப்பல்களை காலிக்கும் திருக்கோணமலைக்கும் கொழும்பிலிருந்து திருப்பியிருக்கிருர்களாம்.

இங்கு காங்கேசன்துறை துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்தால் உணவுக்கப்பல்கள் இங்கு வந்து மக்களுக்கு உணவுத்தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்கலாம். இத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்யப்போவதாகப் பல வருடங்களாகச் சொல்லிவருகிருர்கள். ஆனுல் காரியத்தில் ஒன்றும் காணேம். இனியாவது இவ்வேலையை விரைவாக முடிக்க அரசாங்கம் முன்வருமா?

* * *

விலைவாசிகளைக் குறைக்க விசேஷ கமிட்டிகளை அரசாங்கம் நியமித்தது. ஆனுல் விலைகள் குறைவதற்குப் பதிலாக திடீர் திடீரென உயருகின்றன.

துறைமுகவேலைநிறுத்தத்தை முடித்தாலும் புதிய புதிய வேறு வேலைநிறுத்தங்கள் ஏற்படலாமென்று வதந்திகள் அடிபடுகின்றன. அட கடவுளே! இது வேலை நிறுத்த யுகம் போலும்!

நம்மில் சிலர் மந்திரிகளாக வேண்டுமென்று ஆசைப்பட்டிருக்கலாம். ஆனுல் இன்றுள்ள நிலைமையில் நீங்கள் மந்திரிகளாக விரும்புவீர்களா? பாவம்!

* * *

● நல்ல உடல்கட்டும், உயரமும், ஆங்கில அறிவும் உள்ள நமது வாலிபர்களில் சிலருக்கு வெளிநாடுகளில் வேலை இருப்பதாயும், தக்கவர்களை சிபார்சு செய்யும்படியும் கொழும்புஅன்பரொருவர் கேட்டிருந்தார். இதுபற்றி நம் பலவாலிபர்களை காணக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

தங்கள் உடலே தங்களது செல்வமாக மதித்து, பல வாலிபர்கள் பல பயிற்சிகளும் செய்து, நல்ல உடல்கட்டுடன் இருப்பதைக்காணப் பெருமையாக இருந்தது. உலகில் எங்கும் செல்ல அவர்கள் துணிச்சலுடன் தயாராக இருக்கின்றனர்.

ஓர் வாலிபர் யோகாசனங்களைச் செய்து, 'ஜம்' என்றிருக்கிருர். தமக்கு தலைவலிகூட வருவதில்லை என்றும், மனக்கவலை சிறிதும் கிடையாதென்றும், மனம் எப்போதும் அமைதியாக இருப்பதாயும் தெரிவித்தார்.

இங்கு நீதியரசர் ஒருவர் இப்போது சிரசாசனம் (தலைகீழாக நிற்றல்) முதலிய ஆசனங்களைச் செய்துவருகிருராம். மிகச் சிக்கலான வழக்குகளை விசாரிக்கும்போதும், புத்தி மிகத் தெளிவாக இருந்து பல புதிய புதிய கருத்துக்கள் தோன்றுவதாயும், யோகாசனங்களை சகலரும் பயிலவேண்டுமென்றும் அவர் கருதுகின்ருர். நமது கல்லூரிகளில் இப்பயிற்சிக்கு ஒழுங்கு செய்தால், நமது எதிர்கால சமூ

(5-ம் பக்கம் பார்க்க)

# மலாயாபிரதமரின்சாதனைகளுக்கு 'டைம்ஸ் ஆப் இந்தியா' பாராட்டு

புதுடில்லி, டிச. 16

பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானையும், மலாயாவின் சமாதான முறையிலான முன்னேற்றத்தையும் டைமஸ் ஆப் இந்தியா பாராட்டியிருக்கிறது.

மெர்தேவுக்குப் பின்னர் என்று தலைப்பிட்டு எழுதி உள்ள தலையங்கத்தில் நான் காண்டுகளில் ஏற்பட்டுள்ள சாதனைகளுக்கு கூட்டரசு அரசாங்கமும், பிரதமர் துங்குவுமே பெரிதும் காரணம் என்று கூறுகிறது.

பிரதமர் துங்குவின் முயற்சியினால் தான் அம்னோ—மசிச—ம இ கா ஆகியவற்றின் கூட்டணி ஏற்பட்டது என்றும் அது கூறுகிறது.

நெருக்கடி மிகுந்த பிரதேசத்தில் மலாயா சமாதான முறையில் முன்னேறுவது அதன் ஸ்திரமான செல்வாக்கின் தொடக்கமாகும் என்றும் அது கூறுகிறது.

அரசாங்கத் தரப்பில் சர்வதேச பிரச்சினைகளில் இரு நாடுகளும் நெருக்கமடைந்துள்ளன. பேரரசரின் வருகை இதை மேலும் பலப்படுத்தும் என்று அது கூறுகிறது.

# இந்திய எல்லைக்குள் 6-வது தடவையாக தாக்குதல்!

## போர்த்துக்கல் துருப்பினர் அட்டூழியம்

புதுடில்லி, டிச 17

கோவாவிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என இந்தியா போர்த்துக்கலை கேட்டிருக்கிறது. லிஸ்பனில் இன்று சமர்ப்பிக்கப்பட்ட இந்தியாவின் குறிப்பில் தங்கள் பகுதியில் இனிமேலும் காலனி ஆதிக்கம் இருப்பதை பொறுக்க முடியாது என இந்தியர்கள் தீர்மானித்துள்ளனர்" என்றும் கூறப்பட்டுள்ளது.

கோவா விஷயமாக ஐ. நா. தலைமைக்காரிய தரிசி திரு. யுதாண்ட் எழுதிய கடிதத்திற்கு பிரதமர் நேரு பதிலளித்துவிட்டதாய் அறிவிக்கப்பட்டது.

கோவாவில் சட்டம்,ஒழுங்கு ஆகியன வேகமாய்ச் சீர்குலைந்து வருகிறது என இந்திய வெளிநாட்டிலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

தேசியவாதிகளுக்கும் போர்த்துக்கிய துருப்புக்களுக்கும் இடையே கைகலப்புகள் அதிகரித்துவருவதாயும், நிலைமை அங்கு மோசமாய்ச் சீர்கெட்டு வருவது கவலையளிப்பதாய் உள்ளதாயும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

இன்று காலை இந்திய எல்லைக்குள் 400 யார் தூரம்வந்து காவல் நிலையமொன்றை போர்த்துக்கல் துருப்புக்கள் கண்டபடி துப்பாக்கியால் சுட்டனர் ரோந்து சென்றிருந்த இந்தியப் பொலிசார் துப்பாக்கிச் சப்தத்தைக் கேட்டு திரும்பி வந்து சுட்டபோது அவர்கள் ஓடிவிட்டனர். போர்த்துக்கல் துருப்பினர் நடத்திய தாக்குதல்களிலேயே இச்சம்பவம்தான் மோசமானது என அறிவிக்கப்படுகிறது. அவர்கள் கைக்குண்டுகளையும், வெளிநாட்டுக் குறிகளைக் கொண்ட தோட்டாக்களையும் விட்டுச்சென்றனர்.

இது 6-து எல்லைமீறல் சம்பவம் எனக் கூறப்படுத்றது.

கோவா கவர்னர் ஜெனரல் தப்பியோடிவிட்டதாய் கடைசியாய்க்கிடைத்த செய்திகள் கூறின.

# "உள்நாட்டு கைத்தொழிலுக்கு ஆதரவு அளியுங்கள்"

## திறப்பு விழாவில் உடுப்பிட்டி எம். பி. வேண்டுகோள்

உடுப்பிட்டி, ஞாயிறு

பாடசாலைகளை அரசாங்கம் எடுத்தபோதிலும், அவை பொதுமக்களின் சொத்து என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பல பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளுக்கு வேண்டிய விஞ்ஞான கூடங்கள் இல்லாத பரிதாத நிலைக்கு முற்றுப் புள்ளியிடவேண்டும். எங்கள் பெண்கள் தங்கள் நகைகளை விற்ருவது பாடசாலைகளை முன்னேற்ற முன்வர வேண்டும்.

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் வட்டுவத்தை சனசமூக நிலைய புதுக்கட்டடத் திறப்புவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசியதாவது:-

"இன்று சன்சமூக நிலையங்களுக்கு அரசாங்கம், மான்யம் வழங்கமுடியாத இக்கட்டான நிலையில் இருக்கிறது. அரசாங்க ஊழியருக்கு 80 கோடி ரூபா சம்பளமாகக் கொடுக்க வேண்டிய அரசாங்கத்திடம் 8 கோடி ரூபா மட்டும் கைவசமிருக்கிறது. இந்நிலையில் அரசாங்கத்தை நம்பியிருப்பது தவறாகும். நமது கைத்தொழில்களை நாம் அபிவிருத்தி செய்ய வேண்டும். கள்ளை விஞ்ஞான ரீதியாகப் போத்தல்களில் அடைத்து விற்பதை நாம் வரவேற்கவேண்டும். அதன்மூலம் வெளி நாடுகளிலிருந்துவரும் குடிவகைகளின் இறக்குமதியை ஓரளவுக்காவது குறைக்கலாம்.

## பொன் விழா

உடுப்பிட்டி, ஞாயிறு

கரவெட்டி, வதிரிவாசியும், யாழ்ப்பாணம் மேற்றிராசனத்தைச் சேர்ந்தவருமான வண. பிதா. எஸ். நீக்கலஸ் ஓ. எம். ஐ. அடிகளாரின் ஐம்பதாவது ஆண்டுபொன்விழா, அடுத்த மாதம் 6-ம்திகதி வதிரி அர்ச். அந்தோனியார் ஆலய முன்றிலில் வண. பிதா. ஜே. ஏ. கருணைகரர் தலைமையில் நடைபெறும்.

மன்னர் எம்.பி. திரு. வி. ஏ. அழகக்கோன், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், வண. பிதா. ஈ. ஏ. பெஞ்மின் அல்பிரெட் ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொள்வார்களெனத் தெரிகிறது.

—

## ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கம் எவ்வளவோ சிறப்பாக இருக்கமுடியும். கல்வி அதிகாரி மனம்வைத்தால்போதும்!

* * *

ஆங்கில சுருக்கெழுத்து, தட்டச்சு இவற்றில் நல்ல பயிற்சியுள்ளவர்களை உங்களுக்குத் தெரியுமா? 5 பேருக்கு வெளி நாட்டில் நல்ல சான்ஸ் உள்ளதாம். தெரிந்தால் எனக்கு உடனே எழுதுங்கள். இது பற்றி ஒரு விளம்பரத்தையும் ஈழநாட்டில் நீங்கள் பார்த்திருக்கலாம்.

# ஜேசுதாஸ் புதிய தலைவர்

கோலாலம்பூர், டிச. 15

மலாயா தொழிற்சங்க காங்கிரஸின் புதிய தலைவராக 'கூபக்ஸின்' தலைவர் திரு. வி. ஈ. ஜேசுதாஸ் தேர்ந்தெடுக்கப் படவிருக்கிறார்.

நியமனதினம் முடிவடைந்தபோது அவருடைய பெயர் மட்டுமே பிரேரணை செய்யப் பட்டிருந்தது.

மலாயா தொழிற் சங்க காங்கிரஸில் அங்கம் வகிக்கும் 8 சங்கங்கள் அவருடைய பெயரை பிரேரணை செய்தன. திரு. ஜேசுதாஸ் மலாயா தொழில்நுட்ப சேவையாளர் சங்கத்தின் தலைவருமாவர்.

# உலக மேடை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கள் துரித நடவடிக்கை எடுக்கும்படி அவரை நிர்ப்பந்திக்கும் என்பதில் சந்தேகமில்லை. எட்டுக் கிரகங்கள் ஒன்றுகூடவிருப்பதும் இந்த நடவடிக்கை ஒன்று ஏற்படலாம் என்பதற்கு அடையாளமாய் இருக்கக்கூடும் என சோதிடர்களும் கூறலாம்.

### இயற்கை அளிக்கும் சந்தர்ப்பங்கள்

சீனு, இந்திய எல்லையை ஆக்கிரமித்தால் கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி படுதோல்வியடைந்தது. காங்கிரஸுக்கு பலம் ஏற்பட்டது. இப்போது இந்தியாவில் தேர்தல்கள் நெருங்கிவரும் சமயம் பார்த்து, போர்த்துக்கல் கோவாவில் அடக்குமுறையை அவிழ்த்துவிட்டிருப்பது, மீண்டும் இந்தியாவின் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றியை அளிக்க இயங்கை அறிவித்துள்ள ஓர் உரிய சந்தர்ப்பமாகும். சீன ஆக்கிரமிப்பும், கோவா அடக்குமுறையும் காங்கிரஸ் கடசிக்குக் கிடைத்த இரு அரிய சந்தர்ப்பங்கள் என்றும் கூறலாம். அரிய சமயத்தை சரியாகப் பயன்படுத்துவதில் இந்திய ராஜதந்திரம் சிறப்பானது என்பதற்கு திரு. ஜின்னுவின் மரணத்தின்போது ஹைதராபாத்துக்குப் படைகள் அனுப்பப்பட்டதை ஒரு உதாரணமாகக் கூறலாம்.

வல்லரசுக் கோஷ்டிகளில் சேராத இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கைதான் அதன் எல்லையிலேயே 3 எதிரிகளை (சீனு, பாகிஸ்தான், போர்த்துக்கல்)க் கொண்டுவந்திருக்கிறது என கூறுபவர்களுக்குச் சரியான பதில் கொடுக்கவேண்டியது நேருஜீயின் கடமையாகும்.

### வரலாற்றுச் சுருக்கம்

1500 சதுர மைல்களைக் கொண்ட கோவாவில் 6,50,000 மக்கள்வசிக்கிறார்கள். கோவா, டையூ, டாமன் ஆகியன கடந்த 500 வருடங்களாக போர்த்துக்கலின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த பிரதேசங்களாகும். 1947 ம் ஆண்டு இந்தியா பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து பாண்டிச் சேரி, காரைக்கால், ஏனும், மகஹி, சந்திரநாகூர் ஆகிய பிரதேசங்களிலிருந்து பிரெஞ் ஏகாதிபத்தியமும் வாபஸ்பெற்றுக் கொண்டது ஆனல் எந்த ஏகாதிபத்தியம் முதலில் ஆட்சி செலுத்த வந்ததோ அந்த போர்த்துக்கல் ஏகாதிபத்தியம் மட்டும் இதுவரை நாட்டை விட்டு விலகாதிருப்பது விந்தையே. நடைமுறையில் சாத்தியமற்றதும், காலத்திற்கொவ்வாததுமான கொள்கையை லிஸ்பன் அரசாங்கம் கடைப்பிடித்துவருகிறது சீக்கிரம் அது மூட்டை முடிச்சுக்களுடன் வெளியேற்றப்படுமென நம்பலாம்.

# யாழ்ப்பாண ஆஸ்பத்திரி கமிட்டி அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

ஆஸ்பத்திரியின் திறமையான நிர்வாகம் குறித்தும் வைத்திய அதிகாரியாகவிருந்த டாக்டர் எம். கனகரத்தினம் 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் திகதியிலிருந்து வைத்திய சூப்பிறின்டனுக நியமனம் செய்யப்பட்டது குறித்தும் மகிழ்ச்சியடைவதாக அரசாங்க ஜெனரல் ஆஸ்பத்திரி கமிட்டி 1960—61-ம் வருட நிதியறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அது மேலும் தெரிவிப்பதாவது:-

"வெளிநோயாளர் பகுதிக்கு முதல் தடவையாக செல்லும் நோயாளர், வைத்திய அதிகாரி ஒருவரைக் காணவேண்டும் என்று ஆஸ்பத்திரி கமிட்டி முடிவு செய்திருந்தது. ஆனல் இது அமுலாகப்படவில்லை. வெளி நோயாளர் பகுதியில் 4 வைத்திய அதிகாரிகள் மட்டும் கடமையாற்றுவதே இதற்குக் காரணமாகும். இரத்த வங்கிக்கு அண்மையில் ஒரு வைத்திய அதிகாரியை நியமித்தது குறித்து கமிட்டி நன்றி பாராட்டுகிறது. பயிற்சிக் கல்லூரிகள், பாடசாலைகள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், சிறைச்சாலைகள் ஆகியவற்றுக்கு வேண்டுகோள் விடுத்திருந்த போதிலும் சிறைச்சாலையிலிருந்து மட்டுமே ஆதரவு கிடைத்திருந்தது. இந்த நிலைமையை சீரடையச் செய்வதற்கு நடமாடும் இரத்த வங்கி உதவி செய்யும் என நம்பப்படுகிறது. யாழ்ப்பாணத்துக்கு மார்பு நோய் சிகிச்சை நிலையமும் அவசியம் தேவைப்படுகிறது.

இரவு வேளைகளில் வெளி நோயாளர் பகுதியில் கடமையாற்றுவதற்கு லிகிதர் எவரும் நியமிக்கப்படவில்லை. இந்த வேலையை, டெலிபோன் ஆபரேட்டர்கள்தான் தங்களது வேலையுடன் கவனிக்கவேண்டியிருக்கிறது. லிகிதர்கள் பற்றுக் குறையினல்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை கமிட்டி சுட்டிக் காட்ட விரும்புகிறது. மருத்துவ பகுதியின் 1959,60,61-ம்ஆண்டுஅறிக்கையின் படி, ஒவ்வொரு மாதமும் மார்சு 70 குறைப் பிரசவங்கள்நிகழ் கின்றன் இந்த நிலையத்தில் பயிற்சிபெற்ற தாதிமாரோ அன்றி மருத்துவத் தாதியோ இல்லை. பயிற்சி பெற்ற தாதிமார் மிகவும் அவசியம் தேவைப்படுகின்ருர்கள். பல் சிகிச்சை நிலையத்தில் இரண்டு பல் மருந்துவர் மட்டுமே கடமையாற்றுவதால், ஏராளமாக அங்கு வரும் நோயாளர் பெரும் கஷ்டத்துக்குள்ளாகின்றனா. இது குறித்து தகுந்த நடவடிக்கைகளை உடன் எடுக்கவேண்டுமென்று கமிட்டி வற்புறுத்துகின்றது.

ஆஸ்பத்திரியில் தாதிமார் பற்ருக்குறை நீடித்துவருகிறது. பயிற்சி பெற்ற தாதிமார் இல்லாது இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. 1955-ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆரம்பமான யாழ்ப்பாண தாதிமார் பயிற்சி நிலையக் கட்டடம் 1956-ம் வருஷம் ஏப்ரல் மாதத்துடன் முடிவடையுமென அறிவிக்கப்பட்டது. ஆனல், இன்று வரை இக் கட்டடம் முடிவடையாத நிலையில் இருப்பது வருந்தத்தக்கது 1955-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பமான தண்ணீர்த் தாங்கியின் கட்டட வேலைகள் 1956-ம் ஆண்டு பெப்ரவரியுடன் முடிவடைவதாகயிருந்தும் இன்றுவரை முடிவடையாத நிலையிலேதான் இருந்து வருகிறது. இது காரணத்தால், ஆஸ்பத்திரியில் தண்ணீர்ப்பஞ்சம் நிலவியுள்ளது".

—

## பட்டின சங்கம் நகரசபையாகும்

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறைப் பட்டினசங்கம் அடுத்த பட்டினசபைத் தேர்தலுடன் நகரசபையாக மாறலாம் என அறியப்படுகிறது. நகரசபையாகும்போது பட்டின எல்லை விஸ்தரிக்கப் படலாம் என பலமான வதந்திகள் அடிபடுகின்றன.

—

## மதுரையில் மலாயா அரச தம்பதிகள்

மதுரை, டிச. 17

மலாயா அரச தம்பதிகள் இன்று சென்னையிலிருந்து மதுரை வந்துசேர்ந்தனர்.

விற்பனையாகின்றன !

1962-ம் ஆண்டு

தினக்குறிப்பு

மாணவர்களுக்கெனவும்
மற்றும்
பொதுவாகப் பாவிக்கக்கூடியதும்.

இதில் அனேக விசேஷ அம்சங்களுண்டு.

விலை சதம் 75

ஈழநாடு லிமிட்டெட்
63, சிவன் கோவில் மேல வீதி, யாழ்ப்பாணம்.

விற்பனையாளர்
தமிழ்ப் பண்ணை
193, கே. கே. எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.

# சட்டவிரோதமாகசாராயம்கடத்த முயன்றதாக வழக்கு

## ரூ. 2100 அபராதம் செலுத்துமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாற்பத்தொன்றரைப் போத்தல் உள்ளூர் சாராயத்தைக் கடத்த முயன்றதாக ஐவர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் திரு. அரசு வால்டன் ஐவரையும் ரூ. 2100 அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

உரும்பிராயைச் சேர்ந்த இராமுப்பிள்ளை முத்துலிங்கம், இராமுப்பிள்ளை தியாகலிங்கம், இராமுப்பிள்ளை சுப்பிரமணியம், புலோலியைச்சேர்ந்த சபாரத்தினம் சிவானந்தன் ஆகியோர் இம்மாதம் 9-ம் திகதி சட்டவிரோதமாக நாற்பத்தொன்றரைப் போத்தல் உள்ளூர் சாராயத்தை கடத்த முயன்றதாகக் குற்றஞ்சாட்டி சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. செபமாலையினால் இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்தது.

எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

மாஜிஸ்திரேட், முதலாம் எதிரியை 1000 ரூபாவும், இரண்டாம் மூன்றும் எதிரிகளை தலா 500 ரூபாயும், நாலாம் ஐந்தாம் எதிரிகளை 50 ரூபாவும் அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார்.

## கூ. மொ. வி. கொள்வனவுசெய்ய யூனியன் முடிவு

திருக்கோணமலை, ஞாயிறு

பொதுமக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் நன்மை ஏற்படும் வகையில் உணவுப்பொருட்களை மலிவு விலையில் விற்பதற்கு வர்த்தகர்கள் எல்லாரினதும் கூட்டு முயற்சியுடன் உணவுப் பொருட்களை கொழும்பு கூட்டுறவு விற்பனை நிலையத்திலிருந்து பெறுவதென திருமலை வர்த்தகர்கள் யூனியனின் செயற்குழு அண்மையில் கூடித் தீர்மானித்தது.

இக் கூட்டத்திற்கு திருமலை வர்த்தகர்கள் யூனியன் தலைவர் திரு. இ. சொக்கலிங்கம் தலைமைதாங்கினர்.

## அச்சுவேலியில் ஆடுகள் திருட்டு

### சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை

மாவிட்டபுரம், ஞாயிறு

அச்சுவேலி வாசியான செல்லர் கணபதிப்பிள்ளைக்குச் சொந்தமான ரூ. 155 பெறுமதியான இரண்டு ஆடுகள் இம்மாதம் 10-ம் திகதி திருடப்பட்ட சம்பவத்தையிட்டு சந்தேகத்தின் பேரில் காங்கேசன்துறைப் பொலிசாரால் நெல்லியடி வாசிகளான ஆழ்வான் அண்ணுசாமி, கிட்டினன் நவரத்தினம், மயில்வாகனம் திரவியநாயகம், தம்பிப்பிள்ளை பாலசிங்கம் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் உதவி நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேக நபர்களில் முதலிருவரையும் தலா 400 ரூபா பிணையிலும் மற்ற இரு சந்தேக நபர்களையும் தலா 300 ரூபா பிணையிலும் செல்லும்படியும் இம்மாதம் 23-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

காணமல்போன ஆடுகளில் ஒன்றைச் சாவகச்சேரிப்பொலிசார் கடந்த வியாழக்கிழமை இரவு கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு லொறியில் கொடிகாமத்தில் கைப்பற்றினர்கள். மற்ற ஆட்டை வெள்ளிக்கிழமை காலை நெல்லியடியில் காங்கேசன்துலைப் பொலிசார் கைப்பற்றினர்கள்

## அமைதிக்கு பங்கம்விளைவித்ததாக வழக்கு

மாவிட்டபுரம், வெள்ளி

சங்கானை கிழக்கைச்சேர்ந்த கனகசபை குணரத்தினம், சுப்பிரமணியம் தர்மலிங்கம், சுப்பிரமணியம் தம்பையா, முத்துலிங்கம் இராசதுரை, சண்டிலிப்பாயைச்சேர்ந்த சுப்பிரமணியம் சிவராசசிங்கம், கந்தையா வேலாயுதம், வீரகத்தி கந்தையா, கந்தையா நாகராசா, கந்தையா பொன்னையா, சுப்பிரமணியம் துரைராசா, கந்தையா சின்னத்துரை ஆகியோர் அமைதிக்குப் பங்கம் விளைவித்ததாக சங்கானைப் பொலிசாரால் குற்றம்சாட்டி மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல்செய்யப்பட்ட ஒரு வழக்கில் நீதிபதி எதிரிகளை எச்சரித்து விடுதலை செய்தார்.

## திருமலை மக்கள் புகார்

திருக்கோணமலை, ஞாயிறு

இறக்கக் கண்டிக்கும் குச்சவெளிக்கும் இடையேயுள்ள சலப்பையாற்றுப்பாதை மண்ணில் புதைந்துள்ளபடியால் குச்சவெளி, புல்மோட்டை, தென்னமரவடி, திரியாய் மக்கள் கூப்பன் அரிசியின்றியும் திருக்கோணமலையுடன் போக்குவரத்து வசதியற்றும் இருக்கின்றார்கள். தனிப்பட்ட வள்ளம் வைத்திருப்பவர்கள் வள்ளங்களைப் பொது மக்கள் உபயோகத்திற்கு விட்டுஅதிக பணம் வசூலிக்கின்றார்கள். இதுபற்றி நடவடிக்கை எடுக்கும்படி மக்கள் திருமலைப் பிரதிநிதியையும் போககுவரத்து அமைச்சரையும் கேட்டுள்ளார்கள்.

## 'சமயநூல்கள் நல் வழிகாட்டிகள்'

தெல்லிப்பழை, வெள்ளி

"சமயத்தில் பூரண நம்பிக்கை வைத்தாலன்றி சமயத்தின் கருத்துகள் எவருக்கும் புலப்படாது. புரான இதிகாசங்கள் பல உண்மைகளை மக்களுக்கு விளங்கவைக்கின்றன இதனை யுணராது பலரும் தம் மனம் போனவாறே சமயத்தைப்பற்றிப் பேசுவது வருந்தத்தக்கது. பரம்பொருள் ஒன்றே. அப் பரம்பொருளை அடைய சைவசமய நூல்கள் சிறந்த வழிகாட்டிகளாக உள்ளன. கயமுகாசுர வதம் நல்ல உண்மைகளை நமக்குப் புலப்படுத்துகின்றன."

இவ்வாறு கட்டுவன் துறட்டையிட்டி வைரவகோயில் மண்டபத்தில் உரை நிகழ்த்திய சோ. சிவபாதசுந்தரக் குருக்கள் தமது உரையில் கூறினர். இல்வாலயத்தில் செவ்வாய்க்கிழமை மாலை கயமுகாசுர சங்கார உற்சவம் நிகழ்ந்தது.

## சரவணை கி. மு. சங்கம் தீர்மானம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணைநாகேஸ்வரிவித்தியாசாலையின் வளர்ச்சி கருதி உடனடியாக் ஓர் பொதுக் கூட்டத்தைக் கூட்டவேண்டுமெனப் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தைக் கேட்டுக்கொள்ளும்தீர்மானம் ஒன்று அண்மையில்நடைபெற்ற சரவணைகிராம முன்னேற்றச்சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## செட்டிகுளம் கிராமச் சங்கத் தலைவர் யார்?

முள்ளியவளை, ஞாயிறு

சின்னச் செட்டிகுளம் கிழக்குக் கிராமசபைக்குத் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காய கூட்டம் இம்மாதம் 22-ந் திகதி அலுவலகத்தில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சின்னச் செட்டிகுளம் கிழக்குக் கிராமசபைத் தலைவராகவிருந்த திரு. கே, சிவசிதம்பரம், கடந்த மாத இறுதியில் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை புரிந்து கொண்டதனாலேயே மேற்குறித்த பதவி காலியானது.

## தமிழ்நாட்டில் மலாயா மன்னர்

சென்னை, டிச. 15

இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் மலாயா மன்னரும் ராணியும் இன்று லக்ஷ்மணபுரியிலிருந்து விமானத்தில் சென்னை வந்து சேர்ந்தனர்.

விமானநிலையத்தில் அவர்களை தமிழ்நாட்டு கவர்னர் திரு. மேதியும், முதன்மந்திரி காமராசரும் மற்றும் பெருந்திரளான மக்களும் வரவேற்றனர்.

மன்னர் தம்பதிகள் ராஜபவனுக்குச் செல்லும் வழியிலும் மக்கள் திரண்டுநின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

மலாயா மன்னரும் ராணியும் காந்தி நினைவு மண்டபத்திற்கும், அடையாறு கலாஷேத்திரத்துக்கும் விஜயம்செய்தனர். அடையாறு கலாஷேத்திரத்தில் மாணவிகள் ராமாயணநாட்டியத்தில் சில காட்சிகளை நடித்துக்காண்பித்தனர்.

பாரதத்தின் இதுபோன்ற பழம்பெருங் கலைகளை பேணிப் பாதுகாப்பதுமட்டுமல்ல வெளிநாட்டிலும் பரப்பவேண்டுமென்று மலாயமன்னர் கேட்டுக்கொண்டார்.

### மலாயா மன்னர்

மலாயா மன்னரும் ராணியும் இன்று பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலைக்கு விஜயம் செய்தனர். அவர்களுக்கு ரயில் மாதிரிப் பெட்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

நியுயோர்க், டிச. 17

கோவா நிலைமை சம்பந்தமாக பாரதப் பிரதமர் ஸ்ரீ நேருவும் போர்ச்சுக்கல் அதிபர் டாக்டர் சலசாரும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று ஐ. நா. தற்காலிக தலைமைக்காரியதரிசி யு.தாண்ட் கேட்டுள்ளார்.

# 'தனிமனிதனை சமுதாயவாழ்வுக்கு அழைத்துச் செல்வதுசமயம்'

திருக்கோணமலை, ஞாயிறு

"செந்தமிழ் நாட்டிலே இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்னர் தமிழர்களுடைய வாழ்வில் அரும்பெரும் சீர்திருத்தங்களைச் செய்தவர் நம் மாதவச் செம்மல் சேக்கிழார் பெருமானர். உயர்ந்தோன், தாழ்ந்தோன் என்ற எண்ணற்ற பேதங்களை தமிழினத்தின்கண் இருந்து ஒழிக்கப் பல்வேறு துறைகளிலிருந்து பாடுபட்டவரும் சேக்கிழார் தான். அத்தகைய ஓர் மகான் நினைவாக இவ்விலவச வெளியீடு வெளியிடப்படுவது குறித்து சிவநெறி மாந்தர்கள் பெருமைகொள்ளல் வேண்டும் எனத் திருமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. என். சிவராசா, திருக்கோணமலை இளைஞர் அருள்நெறிமன்றத்தினர் வெளியிட்டுள்ள பத்தாவது இலவச வெளியீடான 'திருநெறிய தமிழ்' என்னும் நூலின் வெளியீட்டு விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- மனித முன்னேற்றத்திற்குச் சமயநெறி தேவை. சமயநெறி கொண்ட வாழ்வுதான் மனித வர்க்கத்தின் ஒழுக்க வளர்ச்சியையும் உயர்ந்த பண்பினையையும்காட்டும் அளவுகோலாகும். தனிமனிதனைச் சமுதாயவாழ்விற்கு அழைத்துச் செல்வது சமயம். அத்துடன் தன்னலம் பிறர் நலத்தின்மீது கைவைக்காதபடி தடுத்து நிறுத்தி ஒழுக்க நெறியைக் காட்டக்கூடியது சமயமாகும்."

இளைஞர் அருள்நெறி மன்ற மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவில் புலவர் வை. சோமாஸ்கந்தன், திரு. டி. சுந்தரராஜா ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

இளைஞர் அருள்நெறிமன்றச் செயலாளர் திரு. இ. சண்முகராசா நன்றி நவின்ஞர்.

## 'டிராக்டருக்கு' சாரதி பலி

முள்ளியவளை, வெள்ளி

ஐந்து பிள்ளைகளின் தந்தையான ஜனுப் அ. முகம்மதுசரீபு என்பவரின் உயிரை அவரினல் ஓட்டப்பட்ட உழவுயந்திரமொன்று பலிகொண்ட பரிதாப சம்பவமொன்று நடைபெற்றிருக்கிறது.

தண்ணூற்றைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் சூடுவெந்த புலவு என்னும்டத்திலுள்ள வயலில் உழுது கொண்டிருந்த போது, உழவு யந்திரம் சேற்றில் புதைந்துவிட்டதாகவும் அதை வெளியே எடுக்க முயன்றபோது, அது அவரின் மேல் ஏறி நசித்துவிட்டதாகவும் மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

அகஸ்மாத்தாக ஏற்பட்ட மரணமென, மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.


மலிவு விற்பனை!

பங்களூர் சீல்க் சேலைகள்

'கோல்ட்' வேலைப்பாடுகள் நிறைந்தது

'கோல்ட்' போடர்களும் ரஜுல்ஸ் போட்டவையும்

மறூன், சிவப்பு, பச்சை, பிறவுண், நீலம், பேப்பிள், மயில், "சொட்" கலர்களிலுள்ளது.

சாதாரண விலை 48-50

விற்பனை விலை 37-50

டயருூம்ஸ்

யாழ்ப்பாணம்

9

இது உயர்ந்த நாகரிகம்!

இது இந்திய கைத்தறி!

சிறந்த நிறங்களில், உயர்ந்த நாகரிகத்தில், பெண்மையின் எழிலோங்க இந்திய கைத்தறித் துணிகளைத் தேர்ந்தெடுங்கள்.

பருத்தி நூலால் தயாரிக்கப்பட்ட புடவைகள் மற்றும் மேலாடைகளும் பலவிதமான மாயாஜால நிறங்களில் கிடைக்கின்றன.

தேவர்களுக்கும் உகந்த கைத்தறித் துணிகள் இந்தியாவையபோன்ற.. புராதனப் பெருமையுடையவை.

ஹாண்ட்லூம்ஸ்

கவர்ன்மென்ட் ஆப் இந்தியா.

தி ஆல் இந்தியா ஹாண்ட்லூம் பேப்ரிக்ஸ் மார்க்கெட்டிங் கோவாப்பரேடிவ் சொசைட்டி லிட். ஜன்மபூமி சேம்பர்ஸ், போர்ட் ஸ்டிரீட், பம்பாய்—1. இந்தியா,



கொழும்பு-7, ஸீ ஸ்டிரீட்.

ஜாப்ன-47, கிரவுண்ட்ப்ளோர், மெயின் ஸ்டிரீட், (சிலோன்)

கண்டி-69, கொழும்புத் தெரு.

ஏடன்-போரா பஜார், க்ரேடர்.

சிங்கப்பூர்-23, ரேஸ்கோர்ஸ் லேன்.

கோலாலம்பூர்-67, ஆம்பாங் ரோடு.

## பளையில் விநாயகர் பூஜை

பளை, ஞாயிறு

பளை கச்சாய் வெளி விநாயகர் ஆலயத்தில் கடந்த 21 தினங்களாக நடைபெற்று வந்த விநாயகர் பூஜை நேற்று முடிவடைந்தது.

## திருமலையில் திருவெம்பாவை

திருக்கோணமலை, ஞாயிறு

திருக்கோணமலையில் இம்முறை திருவெம்பாவை பஜனையைத் திருக்கோணமலை இளைஞர் அருள்நெறி மன்றத்தினரும் விபுலானந்த கழகத்தினரும் நடத்தி வருகின்றார்கள்.


## மலிவு விற்பனை!

பங்களூர் சில்க் சேலைகள்

ரிபன் போடர்கள் போட்டவைகளும்

கோல்ட் பைப்பிங் போட்டவை.

பிங், நீலம், ஆரஞ்சு, கோல்ட், பேப்பிள் பச்சை வேறு பல நிறிங்களில் உண்டு.

சாதாரண விலை 29-50

விற்பனை விலை 19-50

## டயருமஸ்

யாழ்ப்பாணம்.

10


## அச்சுவேலி கொலை வழக்கு

### விசாரணை ஒத்திவைப்பு

மாவிட்டபுரம் ஞாயிறு

அச்சுவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லையா என்பவரைக் கொலை செய்ததாகவும் அச்சுவேலியில் சட்ட விரோதமாகக் கூட்டம் கூடிக் கலகம் விளைவித்ததாகவும் மற்றும் மூன்று குற்றச்சாட்டுகள் மீதும் அச்சுவேலியைச் சேர்ந்த இளையதம்பி சின்னத்தம்பி, சின்னத்தம்பி சபாபதி, சின்னத்தம்பி தவராசா, ஆறுமுகம் சுப்பையா, சுப்பையா கனகரத்தினம், சின்னத்தம்பி வேலுப்பிள்ளை, இளையதம்பி கந்தசாமி ஆகிய ஏழுபேர் மீதும் காங்கேசன்துறைப் பொலிசாரால் மல்லாகம் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு பதில் மாஜிஸ்ரேட் திரு. எஸ். இளையதம்பி முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இம்மாதம் 27ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# மலாயாபாட்டாளிகளுக்கு ஜீவிய சம்பளத் திட்டம்

### ம. தொ. ச. காங்கிரஸ் கோரிக்கை

கோலாலம்பூர், டிச. 15

அரசாங்க தொழிற்துறை ஊழியர்களுக்கான ஒரு ஜீவிய சம்பளத் திட்டத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு கூட்டரசு அரசாங்கத்தை மலாயன் தொழிற் சங்க காங்கிரஸ் கேட்டுக் கொள்ளும்.

இங்கு நடைபெற்ற மூன்று நாள் வருடாந்திர பிரதிநிதிகள் மகாநாட்டில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மலாயன் தொழில் நுணுக்க சேவையாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. ஏ. தருமலிங்கம் பிரேரணை செய்த இத்தீர்மானத்திற்கு 102 பிரதிநிதிகள் ஆதரவளித்தனர்.

இதை எதிர்த்து ஒருவரும் வாக்களிக்கவில்லை. ஆனால் பினங்கு துறைமுக கமிஷன் ஊழியர்சங்கத்தைச் சேர்ந்த இஞ்சே முறைமது ஷரிப் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

இந்த தீர்மானத்திற்கு முன்னாள் பினங்கு மேயர் திரு. டி. எஸ். ராமனுதன் (தேசிய ஆசிரியர்கள் சங்கம்) ஒரு திருத்தம் கொண்டுவந்த போது பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது:

மலாயா பாட்டாளிகளின் ஜீவிய. சம்பளத்தை நிர்ணயிக்க ஒரு கமிஷன் நியமிக்கும் வரை தின சம்பளத் தொலாளர்களுக்கு தினம் 4 வெள்ளி சம்பளம் கொடுக்குமாறு அந்த திருத்தம் அரசாங்கத்தை கோரியது.

ஆனால் திருத்தம் ஏற்கப்படவில்லை.

இந்த மகாநாட்டில் சுமார் 39 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கிராமசேவகர் நேர்முகப் பரீட்சை

முள்ளியவளை, ஞாயிறு

வவனியாக்கச்சேரியில் நடைபெற்ற கிராமசேவையாளர் பரீட்சையின் போது, அரசாங்க அதிபர் திரு. எஸ். பி. என். செனிவரத்தின, கல்வி அதிகாரி திருமதி ஆர். ஆர். நவரத்தினம், விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு. கே. என். ஜெயசீலன் ஆகியோரைக் கொண்ட குழுவினர் நேர்முகப் பரீட்சையை நடத்தினர். நடவடிக்கைகளெல்லாம் தமிழிலேயே நடைபெற்றன.

## கைப்பந்தாட்டமும் உதை பந்தாட்டமும்

மாவிட்டபுரம், வெள்ளி

கிழக்குமாகாண கைப்பந்தாட்டச் சாம்பியன்களான கல்முனை யுனைட்டட் விளையாட்டுக் கழகத்திற்கும் சுன்னாகம் ஜெக்கட் விளையாட்டுக்கழகத்திற்குமிடையே காங்கேசன்துறை ரேயல் விளையாட்டுக்கழக ஆதரவின்கீழ் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஓர் கைப்பந்தாட்டப்போட்டியில் கல்முனை யுனைட்டட் விளையாட்டுக் கழகம் 2—1 கோல்களினால் வெற்றியீட்டியது.

∴ ∴ ∴

காங்கேசன்துறை ரேயல் விளையாட்டுக்கழகக் கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி அமைப்பின்கீழ் புன்னாலைக்கட்டுவன் விளையாட்டுக்கழகமும், கங்கேசன் ஸ்புட்னிக் 'ஏ' பிரிவு கோஷ்டியும் கலந்துகொண்ட போட்டியில் புன்னாலைக்கட்டுவன் விளையாட்டுக்கழகம் 2-1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது.

∴ ∴ ∴

கங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலை விளையாட்டுக் கோஷ்டிக்கும் தெல்லிப்பழை ஆனந்தா விளையாட்டுக்கழகத்திற்குமிடையே சீமேந்து தொழிற்சாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற முதல் பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் ஆட்டம் வெற்று தோல்வியின்றி முடிவடைந்தது.

இரு கோஷ்டியினரும் தலா இரு கோல்கள் போட்டனர்.

∴ ∴ ∴

வல்லுவெட்டித்துறை, புளு விளையாட்டுக்கழகம் காங்கேசன்துறை ரேயல் விளையாட்டுக்கழகத்துடன் சினேகித முறையில் கலந்துகொண்ட முதல் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் காங்கேசன்துறை ரேயல் புளையாட்டுக்கழகம் 2-1 கோல்களினால வெற்றியீட்டியது.

# மாணவர் அப்பியாச புத்தகங்கள்

### ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷனால் தயாரிக்கப்பட்ட

முதல் தர ரக கடுதாசியைக் கொண்டு செய்யப்பட்ட மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் கோடுகள் இருப்பினும் இல்லாது விடினும் கீழ்க்கண்ட விலைக்கு இலங்கை முழுவதிலும் பெற்றுக்கொள்ளலாம்.

| சில்லறை விலை | | மொத்த விலை | |
|---|---|---|---|
| கடுதாசி தொகை | அ. புத்தகம் ஒன்று | டசின் | குரெஸ் |
| 40 பக்கம் | 11 சதம் | ரு. 1-20 | ரு. 14-40 |
| 80 ,, | 20 ,, | ,, 2-40 | ,, 28-80 |
| 100 ,, | 30 ,, | ,, 3-36 | ,, 40-32 |
| 200 ,, | 60 ,, | ,, 6-96 | ,, 83-52 |

மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் கீழ் வரும் பத்து ரகங்களிலும் கிடைக்கும் வேறுபட்ட ரகங்களெனினும் அப்பியாசப் புத்தகங்களின் விலை ஒன்றே.

**அப்பியாச புத்தக ரகங்கள்:**

ஒற்றைக் கோடிட்ட அப்பியாசப் புத்தகம், சதுரக் கோடு, இரட்டைக்கோடு (நீலம்), இரட்டைக்கோடு (நீலமும் சிவப்பும்) ஒருபக்கம் ஒற்றைக் கோடிட்டு மறுபக்கம் வரைக் கட்டமிடப்பட்டது, கோடு இடாது ஓரம் இடப்பட்டது, ஒரு பக்கம் ஒற்றைக் கோடிட்டு மறுபக்கம் கோடுகள் இல்லாதது, ஓரம் இடப்பட்ட அகலமான சதுரக்கோடுகள் இடப்பட்டது, ஓரம் இடப்படாத, அகலமான சதுரக் கோடிடப்பட்டது.

ஐந்தும் ஐந்துக்கு மேற்பட்ட குரெஸ் ஆடர் செய்பவர்களுக்கு:

1. 10 சதவீத கழிவு உண்டு.
2. கொழும்பு ஸ்டோருக்கு அண்மையிலிருக்கும் இடங்களுக்கு ரயில் செலவு ஸ்தாபனம் ஏற்றுக்கொள்ளும்.

விபரங்கள் அறிய:

**ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷன்**

போன்: 94040.

6, அல்பேர்ட்க்ரெசன்ட், கொழும்பு 7.

## வடிசாராயம் கைப்பற்றப்பட்டதாம்

மாவிட்டபுரம், ஞாயிறு

சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த சார்சன்ட் வி. வீரவாகு தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி இணுவிலைச் சேர்ந்த சின்னையா நன்னித்தம்பியின் வீட்டை திடீர் பரிசோதனை செய்து மூன்றேமுக்கால் போத்தல் வடிசாராயத்தையும் வடிக்க உபயோகிக்கப்படும் உபகரணங்களையும் கைப்பற்றியதாகத் தெரிகிறது.

சின்னையா நன்னித்தம்பியின் வாக்கு மூலத்தை பொலிசார் பதிவு செய்தபின் அறிவிக்கப்படும் பொழுது கோர்ட்டில் ஆஜராகும்படியும் தெரிவித்தனர்.

## விவசாயிகளின் 'இலவச' பிரயாணம்!

முள்ளியவளை, ஞாயிறு

இ. போ. ச. வேலை நிறுத்தத்தைப் பயன் படுத்திச் சில 'வான்'காரரும், தனிப்பட்ட 'கார்க்'காரரும் பிரயாணிகளிடம் அதிகக் கட்டணம் அறவிட்ட செய்திகள் வந்து கொண்டிருந்தபோது, "வவனிக்குளத்திலிருந்து ஓர் நல்ல செய்தியும் கிடைத்தது.

பஸ் ஊழியர் வேலை நிறுத்தத்தின்போது வவனிக்குளத்துக்கு வந்து திரும்பிய, யாழ்ப்பாண்ம் கச்சேரியைச் சேர்ந்த 'ஜீப்' ஒன்றை அங்குள்ள விவசாயிகள் சிலர் சூழ்ந்து கொண்டு, தங்களையும் ஏற்றிச் செல்லும்படி கேட்டுக்கொண்டனர்.

'ஜீப்'பிலிருந்த அதிகாரிகள் விவசாயிகளை ஏற்றிக்கொண்டு வந்து, இடையியே அவர்களைப் பார்த்து, "காசு வைத்திருக்கிறீர்கள்?" எனக் கேட்டபோது "காசு இல்லாமல் பிரயாணம் செய்யப் புறப்படுவோமா?" எனத் திருப்பிக் கேட்ட் விவசாயிகள், காசை எடுத்து நீட்டினர்.

அப்போது அந்த அதிகாரிகள் புன்சிரிப்புடன், "பிரயாணக் கூலியைக் கோவிலுக்குக் கொடுங்கள்" என்று சொல்லி, அவர்களை உரிய இடங்களில் இறக்கிவிட்டுச் சென்றனர்.

## கூட்டுறவுசமாச நிர்வாகிகள் தெரிவு

முள்ளியவளை, ஞாயிறு

வவனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச விசேட பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. இ. வ. வில்வராசா, உபதலைவர் திரு. பி. கந்தசாமி, செயலாளர் திரு. பி. முத்தையா ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

# கலை அரங்கம்

## சங்கீத டைரக்டர் நாகையா

குணசித்திர நடிகரான வி. நாகையா வெறும் நடிகர் மட்டுமல்ல சிறந்த பாடகர் - சிறந்த சங்கீத டைரக்டர்!

1938ம் ஆண்டில் வாஹினியாரின் ' வந்தே மாதரம் 'என்னும் தெலுங்கு படத்திற்கு சங்கீத டைரக்டராக ஒப்பந்தம் செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து சுமங்கலி, தேவதா, பக்த போதனு, சுவர்க்கசீமா, யோகி வேமன்னு இத்தனை படங்களுக்கும் இசை அமைப்பாளராக இருந்திருக்கிறார்.

நாகையா இசை அமைத்த அந்த நாட்களில் ஒஸ்தாடேமா பாவா, (சுமங்கலி படத்தில் ஒரு பாட்டு) சுவர்க்க சீமா படத்தில் பானுமதி பாடும் ஓகோ பாஷரமா பாடல்கள் மிகவும் புகழ் பெற்றதாகும்.

மேலும் தாய் உள்ளம், பேம்லுபாட்லு, ஏழைபடும் பாடு, என் வீடு குமாஸ்தா, ஹேமரெட்டி மல்லம்மா, விஸ்வமோஹினி, எதிர்பாராதது ஆகிய படங்களில் ஒரு சில பாடல்களுக்கு மட்டும் இசை அமைத்திருக்கிறார்.

இவர் தற்போது சொந்தத் தயாரிப்பாக ' ராமதர்ஸ் 'என்னும் படத்தைத் தயாரித்து வருகிறார். இதில் நாகையாவின் சிறந்த யாடல்களைக் கேட்டு மகிழலாம்.

## வி. கே. ராமசாமியின் 'ஏட்டு ஏகாம்பரம்!'

நடிகர் வி. கே. ராமசாமியின் நாடகக் குழுவினர் 'ஏட்டு ஏகாம்பரம்'என்னும் நகைச்சுவை நாடகத்தை அடுத்த மாதம் நடத்தப்போகின்றனர். இதில் வி. கே. ராமசாமியுடன் சிரிப்பு நடிகை சி. கே. சரஸ்வதியும் நடிப்பார்.

## ரவியின் பூர்வீகம்

பம்பாய் பிரபல இசை அமைப்பாளரான ரவி, 'நாகின்' புகழ் ஹேமந்த்குமாரிடம் உதவி இசை அமைப்பாளராக இருந்தார். குருநாதர் ஹேமந்த்குமாருக்கு 'நாகின்' புகழ் கொடுத்தது என்றால், அவரது சீடரான ரவிக்கு 'சவுத்வின் கா சாந்த்' படம் புகழைக் கொடுத்தது! ரவி, சிறந்த சங்கீத டைரக்டர் மட்டுமல்ல; சிறந்த பாடகரும் கூட!

## ஓம் பிரகாஷ் யார்?

பம்பாய் நடிகரான ஓம் பிரகாஷ் ஜம்முவில் ஒரு லாண்டிரிக்குச் சொந்தக்காரராக இருந்தவர். அத்தொழிலை விட்டபின் அகில இந்திய ரேடியோவில் விவசாயம் பற்றிய செய்திகளை வெளியிடும் பணி பெற்றார். அன்று அவருக்குச் சம்பளம் ரூ. 25. பிறகு நாற்பது ரூபாயாக உயர்த்தப்பட்டது. இரண போஸ் தயாரித்த 'தஸ்வி' என்னும் படத்தில் முதன் முதலில் தோன்றி, விரைவாக நட்சத்திரப் பதவியை எட்டிப் பிடித்தார்.


விரைவில் எதிர்பாருங்கள்!

ராஜமணி பிக்சர்ஸ்

பாசமலர்

கடைசி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

நாகேஸ்வர ராவ், அஞ்சலிதேவி, பாலையா நடித்த




சிறந்த கதை அமைப்பும் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் நடிப்பும் ஒருங்கே அமைந்த சித்திரம்

மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30

ஜெமினி கணேசன் அஞ்சலிதேவி நடித்த

கணவனே கண்கண்ட தெய்வம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# "நாடகக் கோஷ்டியுடன் நான் மீண்டும் வருவேன்"

## நடிகர் பாலாஜி தகவல்

### நாடகம், சினிமா, கலைஞர் பெயரில் மன்றங்கள் பற்றி விளக்கம்

"எனது நாடகக் கோஷ்டியுடன் அடுத்த மார்ச் மாதத்தில் இலங்கைக்கு மீண்டும் வருவேன். யாழ்ப்பாணத்தில் சில நாடகங்களை நடித்துக் காண்பிப்பேன்" என்று பிரபல தமிழ்த்திரை நடிகர் பாலாஜி 'ஈழநாடு' 'கலை அரங்கம்' நிருபருக்கு நேற்று அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இலங்கைக்கு இப்பொழுது தான் முதல் தடவையாக வந்துள்ள நடிகர் பாலாஜி சனி, ஞாயிற்றுக்கிழமை ஆகிய வாரக்கடைசியையாழ்ப்பாணத்தில் களித்துவிட்டு இன்று பிரயாணமாகிறார்.

தம்மை இலங்கைக்கு வரவழைத்த அரியாலையைச் சேர்ந்த திரு. போஸின் வீட்டில் நேற்று நண்பகல் விருந்துண்பதற்காக தமது யாழ்ப்பாண நாண்பர்களுடன் தம்மைத் 'தயார்' செய்துகொண்டிருந்த நடிகர் பாலாஜியை 'ஈழநாடு' நிருபர் சென்று சந்தித்ததும் 'வணக்கம்' வாருங்கள் என்று கூறியபடியே மலர்ந்த முகத்துடன் வரவேற்றார் பாலாஜி.

நல்ல நிறமும் ஆஜானுபாகுவான தோற்றமும். எவருடனும் மனம்விட்டு அளவளப்பாகப் பேசும் இனிய சுபாவமும் கொண்டவர் நடிகர் பாலாஜி.

சாப்பாட்டு நேரம்; நண்பர்களும் ரசிகர்களும் வந்திருக்கும் நேரம். 'பேட்டி' என்ற முறையில் இல்லாமல் 'சந்திப்பு' என்ற முறையில் சில நிமிஷநேரங்கள் (ஐந்து நிமிஷங்களுக்கும் குறைவாகவே) பாலாஜியுடன் சினிமாக்கலை சம்பந்தமாக அவரது கருத்தை அறிந்துகொள்ள முடிந்தது. நடிகர் பாலாஜி தெரிவித்த சில கருதுக்கள் வருமாறு:-

#### நாடகக் கலை பாதிக்கவில்லை

தமிழ்த்திரை உலகம் முன்னேறிவருகிறது. சினிமாவின் வளர்ச்சியால் நாடகக் கலை எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. நாடகத்திலிருந்து பிறந்ததுதான் சினிமா. சினிமாவின் வளர்ச்சியினால் நாடகக் கலையும் புதிய புதிய 'உத்திகளை'க் கையாண்டு முன்னேற்றம்பெறக் கூடியதாக உள்ளது.

கேள்வி: சிறந்த நடிகர்களாகத் திகழும் சிலரைப் போல நீங்களும் ஆரம்பகாலத்தில் நாடகங்களில் நடித்து அதன் பின்னர்தான் சினிமாத் துறைக்கு வந்தீர்களா?

பாலாஜி: இல்லை. கல்லூரியில் படிக்கும்போது கல்லூரி நாடகங்களில் நடித்திருக்கிறேன். பின்னர் நாடகத்துறையில் ஈடுபடுவதற்கு முன்னரே சினிமா என்னைத் தன்பால் இழுத்துக் கொண்டு விட்டது.

கே. இப்பொழுது நாடகங்களில் நடிப்பதில்லையா?

பா: ஏன் இல்லை! இந்தியாவுக்குத் திரும்பியதும் நாடக வேலை இருக்கிறது. நான் ஒரு நாடகக் கோஷ்டிகூட வைத்திருக்கிறேன்.

கே: நாடகக் கோஷ்டியுடன் இங்குவரும் உத்தேசமுண்டா?

பா: ஆமாம்! அதைப்பற்றித்தான் இப்பொழுது நண்பர்ளுடன் பேசிக்கொண்டிருந்தேன். அடுத்த மார்ச் மாதத்தில் எனது நாடகக் கோஷ்டியுடன் இங்கு வருவேன்.

கே: சில நாடகங்களில் ஒரு சில சம்பவங்களை நிழற் காட்சியாக 'சினிமா உத்தியில் காட்டப்படுவது நல்லதா? சினிமா உத்திகளை நாடகங்களில் கலந்து கொள்வதால் நாடகக் கலையின் தனித்தன்மை கெட்டுவிடாதா?

பா: இல்லை இதனால் நாடகக்கலை மேலும் மேலும் வளர்ச்சியடையுமே தவிர குன்றிவிடும் என்று சொல்லமுடியாது.

#### நடிகர் சங்கத்தில் இல்லை

கே: தென்னிந்திய நடிகர் சங்கத்தில் நீங்கள் ஒரு அங்கத்தவரா?

பா: இல்லை.

கே: தமிழ்நாட்டில் நடிகர்களுக்குள் வேற்றுமை அதிகம் இருப்பது உண்மைதானா?

பா: தயவுசெய்து இது மாதிரிக் கேள்விகளைக் கேட்காதீர்கள். நான் நிச்சயமாகப் பதில் சொல்லமாட்டேன். அரசியல் போன்றது.

கே. நீங்கள் அரசியலில் பங்கு கொள்வதில்லையா?

பா: நடிப்புக்கலையிலும் இப்பொழுது அரசியல் தான் அதிகம். பெரிய நடிகன், அதற்கு அடுத்தபடியாக உள்ள நடிகன், குறைந்த நடிகன், சின்ன நடிகன் இப்படி கட்சிகள் உண்டு.

#### கலைஞர் பெயரில் மன்றங்கள்

கேள்வி: சில நடிகர்கள்—கலைஞர்கள்– பெயரில் தமிழ் நாட்டில் மன்றங்கள் அதிகமிருக்கின்றன. இவை பற்றி உங்கள் கருத்து என்ன? இம் மன்றங்களினால் என்ன பயன்?

பாலாஜி: என் பெயரில் அப்படியொரு மன்றமும் கிடையாது. அதை நான் விரும்பவும் இல்லை. என் பெயரில் மன்றம் தொடங்கவிடமாட்டேன். இந்த மன்றங்களினால் 'பயன்' என்று சொல்லமுடியாது. ஒரு சிலர் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வதற்காகவும் புகழ் தேடிக் கொள்வதற்கும் இந்த மன்றங்களை ஆரம்பிக்கிறார்கள்.

கே: இதற்கு அந்தந்தக் கலைஞர்களதும் உடன்பாடா? மறைமுகமாக அவைகளுக்கு உதவி செய்கின்றனரா?

பாலாஜி: அப்படியொன்றுமில்லை. கலைஞர்கள் அவற்றை ஆதரிப்பதாகத் தெரியவில்லை.

#### குழந்தை பிறந்து ஒரு மாதம்

சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் திருமணம் செய்துகொண்ட நடிகர் பாலாஜி இப்பொழுது ஒரு ஆண்குழந்தைக்குத் தந்தை. "இலங்கைக்குப் புறப்படும்பொழுது என் மனைவியும் என்னுடன் வரவே விரும்பினாள். ஆனால் குழந்தை பெற்று ஒருமாதம் கூட ஆகவில்லை. இந்த நேரம் வேண்டாம். இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம் என்று அவளைச் சமாதானம் செய்தேன்" என்று நடிகர் பாலாஜி தெரிவித்தார்.

இப்பொழுது சுமார் பத்துத் தமிழ்ப் படங்களில் நடித்து வரும் பாலாஜியிடம் நீங்கள் இதுவரை நடித்த படங்களில் உங்களுக்கே திருப்தியளிக்கக் கூடிய விதத்தில் எந்தப்படத்தில் நடித்திருக்கிறீர்கள் என்று கேட்டபொழுது "எந்தப் படத்திலும் எனக்குத் திருப்தியான முறையில் நான் இன்னும் நடிக்கவில்லையென்றே கருதுகிறேன். கலை ஒரு சமுத்திரம் போன்றது. அதன் கரையைக் காணமுடியாது" என்று அவர் பதிலளித்தார்.

இலங்கைக்கு முதல் தடவையாக வந்திருக்கும் நீங்கள் இலங்கையைப் பற்றியும் இலங்கை மக்களைப்பற்றியும்என்ன நினைக்கிறீர்கள்? என்ற கேள்விக்கு நடிகர் பாலாஜி பின்வருமாறு கூறினார்:-

இலங்கை அழகான நாடு. இலங்கை மக்கள் அன்புடன் பழகுபவர்கள். இந்தியாவுக்குத் திரும்பியதும் இதுவரை இங்கு வராத கலைஞர்களைக் கட்டாயம் இலங்கைக்குப் போய் விட்டு வாருங்கள் என்று சொல்வேன்.

நான் மலையாளத்தைச் சேர்ந்தவன். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மலையாளத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் வித்தியாசமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

## விரிவுரையாளர் வெள்ளித்திரை நடிகரானார்!

இந்திப்பட உலகின் சிறந்த நடிகரான பால்ராஜ்சஹ்னி அவரது24வது வயதில்சாந்திநிகேதனில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். பின்னர் முறையே காந்தியாரின் சேவா கிராமத்தில் ஆரம்பக்கல்வி போதகராகவும், லண்டன் பி. பி.சியில் அறிவிப்பாளராகவும், ஐ பி.டி. ஏ யின் டைரக்டராகவும் பணிபுரிந்தவர். இவைகளுக்குப் பின்னரே திரை உலகில் நடிகராக சேர்ந்தார்.

## 'வேங்கையின் மைந்தன்'

'கப்பலோட்டிய தமிழன்' தயாரித்து வெற்றிகரமாக வெளியிட்ட பத்மினி பிக்சர்சா அடுத்ததாக 'வேங்கையின் மைந்தனை' த் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளைச்செய்து வருகின்றனர்.

'அகிலன்' கதை வசனம் எழுதும் இப்படத்தை திரு. பி. ஆர். பந்துலு டைரக்ட் செய்வார்.

## 'சாரதா' வளர்கிறது

ஏ. எல். எஸ். பட நிலையத்தாரின் குறுகிய காலத்தயாரிப்பான 'சாரதா' பரணியில் இரவுபகலாக வளர்ந்து வருகிறது.

இளம் ஆசிரியரையும் அவருடைய காதல் மனைவியையும் சுற்றிச் செல்லுமாம் இதன் திரைக்கதை நிகழ்ச்சிகள்.

பாடசாலை ஆசிரியராக எஸ். எஸ். ராஜேந்திரனும் அவரது அருமை மனைவி 'சாரதா'வாக விஜயகுமாரியும் இப்படத்தில் நடிக்கின்றனர்.

## நடிகையின் மறதி; படாதிபதிக்கு நஷ்டம்

பம்பாய் நடிகையான அசாலசச்தேவ். ஸ்டுடியோவிற்கு மிகவும் அவசரமாக சென்றுவிட்டார்! அந்த அவசரத்தில் தன்னோடு எடுத்துச் செல்லும் 'மேக்கப் பொருள்கள் அடங்கிய பெட்டியை மறந்துவிட்டார்! ஸ்டுடியோவில் மேக்கப் ரூமுக்கு சென்றபோதுதான் அவருக்கு நினைவு வந்தது, ஆகவே வீட்டிற்கு டெலிபோன் செய்து புதிய வேலைக்காரனிடம் 'மேக்கப் பெட்டி'யை எடுத்துவரும்படி கூறினார். விட்டிற்குபோன் செய்து வெகு நேரமாகிவிட்டது; வேலைக்காரன் ஸ்டுடியோவுக்கு வராததால் மீண்டும் வீட்டிற்குப் போன் செய்தார். வெகு நேரத்திற்கு முன்பே ஸ்டுடியோவுக்கு வந்துவிட்டதாக செய்தி கிடைத்தது! இதைக் கேள்விப்பட்டதும் அசாலா ஸ்டுடியாவில் இருந்த ஒரு சிப்பந்தியை அழைத்து ஸ்டுடியோ வாசலில், தன்னுடைய வேலைக்காரன் இருந்தால் அழைத்து வரும்படி கூறினார்.

நடிகையின் சந்தேகம் வீண்போகவில்லை, அந்த வேலைக்காரன் ஸ்டுடியோ வாசலிலேயே காத்திருந்தான். ஏன் தெரியுமா? அந்த வேலைக்காரனை, ஸ்டுடியோ காவற்காரன் உள்ளே அனுமதிக்க மறுத்து வெளியே நிறுத்திவைத்துவிட்டான். இந்தத் தடையால் படப்பிடிப்பு வேலையில் பாதி நாள் வீணகிவிட்டது! இந்த நஷ்டம் படாதிபதிக்குத்தானே!